பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 10 வியாழக்கிழமை 25.05.2023 கதிர் 196

# நெடுங்கேணி காணிகளில் கண்வைக்கிறது சவூதியும்

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் 2000 ஏக்கர் நிலத்தை அமைச்சர் காதர் மஸ்தானுடன் சென்று பார்வையிட்டனர்

(ந.லோகதயாளன்)

தொழில் முதலீடுகளை மேற்கொள்ளும் நோக்குடன் சவூதி ஆரேபியாவைச் சேர்ந்த சிலர் வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பகுதியில் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் காணியைப் பார்வையிட்டுள்ளனர்.

நெடுங்கேணி நைனாமடுவில் சீனித்தொழிற்சாலைஒன்றுதொடங்கப்படுவதற்காகவும் கரும்புச்செய்கைக்காகவும் ஆயிரம் ஏக்கர் 'பெர்மிட்' காணிகளைத் தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட சீன நிறுவனம் ஒன்றுக்கு வழங்க ஜனாதிபதி கடந்த வாரம் உத்தரவிட்டிருந்த நிலையில், சவூதியைச்சேர்ந்தவர்களும் அதே பகுதியில் காணிகளைப் பார்த்துள்ளனர். அவர்களுக்கு கென்பாம், டொலர்பாம் என்று பெரும் பண்ணை நிறுவனங்கள் போருக்கு முன்னர் அமைந்திருந்த காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவிற்குச் சொந்தமான காணிகள் காட்டப்பட்டுள்ளன.

☞ 2



## இனி இது ரகசியம் அல்ல!


ஜனநாயகக் கூட்டணி (ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி) தலைவர்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் இரு தினங்களுக்கு முன்னர் ஒரு அறிக்கை விடுத்திருந்தார். நெடுங்கேணியில் சீன உற்பத்தித் தொழிற்சாலைக்கு 1000 ஏக்கர் நிலம் வழங்கப்படவுள்ளமை குறித்து அவர் அந்த அறிக்கையில் கவலை தெரிவித்திருந்தார்.

மகாவலி அபிவிருத்தி வலயத்தின் "எல்" வலயம் மற்றும் "ஜே" வலயங்கள் குறித்து, நீரே வராத பகுதிகளில் எதற்கு புதிய வலயங்கள் அமைக்கப்படுகின்றன என்று கேள்வியெழுப்பியிருந்த அவர், அவை எல்லாம் சிங்களக் குடியேற்றங்களுக்கான அடித்தளமா என்றும் கேட்டிருந்தார்.

இன்று தமிழ் மக்களின் பூர்வீக நிலமான முல்லைத்தீவு

☞ 2

## முகமாலை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு



(ந.லோகதயாளன்)

ஏ 9 வீதியில் முகமாலைப் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்து நேற்றுக் காலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் யாழ்ப்பாணம் துன்னாலை பகுதியை சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயம் அடைந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த இ.போ.சபைக்கு சொந்தமான பேருந்துடன்

☞ 2

## கடத்தலுடன் தொடர்பில்லை என மறுக்கிறார் ரஹீம் எம்.பி.

நாட்டிற்குச் சட்டவிரோதமான முறையில் தங்கம் கடத்தி வந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அந்த குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ளார்.

தனக்கும் அந்த கடத்தல் சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆட்சி மீது மோசமான அபிப்பிராயம் கிடையாது. எனினும், நேற்று இடம்பெற்ற சம்பவத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.என்னுடன் வந்த நண்பர் ஒருவரே பெருந்தொகையான தங்கம் மற்றும் கையடக்கதொலைபேசிகளை கொண்டுவந்திருந்தார்.

அவர்தான் இந்த வேலையைச் செய்திருந்தார். அவர் கைகளில் இருந்தே தங்கம் உள்ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டது. ஆனால் என்னை குற்றவாளியாக ஆக்கியுள்ளனர்.

அந்தப்பொருட்களை பறிமுதல் செய்துள்ளதுடன், 75 இலட்சம் ரூபா அபராதமும் விதித்துள்ளனர். இந்த விடயம் குறித்து ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமருக்கும் அறிவித்திருந்தேன். ஆனால் யாரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை, உதவியும் செய்யவில்லை.

அவர்கள் நினைத்திருந்தால் என்னை காப்பாற்றி

☞ 2

## வடக்கில் சமூகச் சீரழிவுகளை கட்டுப்படுத்த புதிய வேலைத் திட்டம் உருவாக்கப் பணிப்பு

### வடக்கு மாகாண ஆளுநர் தனது முதல் பணியாக இதில் கவனம்



வடக்கு மாகாணத்தில் காணப்படும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் புதிய வேலைத் திட்டத்தைத் தயாரிக்கும் பணிகளை, ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தொடங்கியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஆளுநர் பதவியை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்ற பின்னர் தமது முதல் பணியாக அவர் இந்த வேலைத்திட்டத்தை உருவாக்கும் பணிகளைத் தொடங்கியுள்ளார்.

மே 22 திங்கட்கிழமை காலை 9.30க்கு உத்தியோகபூர்வமாக தமது பணிகளைப் பொறுப்பேற்ற ஆளுநர் சார்ள்ஸ், அன்றையதினம்

☞ 2

## இன்னும் 6 மாதங்களில் வங்கி வட்டி குறையும்

### சாகல ரத்னாயக்க எதிர்வுகூறல்

எதிர்வரும் 6 மாதங்களுக்குள் வங்கி வட்டி சதவீதங்களைக் குறைக்க முடியும் என்று ஜனாதிபதி அலுவலகப் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கிருலப்பனையில் நேற்று இடம்பெற்ற ஐ.தே.க. தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு இதே காலப் பகுதியில் இலங்கையில் காணப்பட்ட நெருக்கடி நிலைமை இந்தளவுக்கு விரைவாகத் தீர்க்கப்படுமென எதிர்பார்க்கவில்லை என்று பலரும் குறிப்பிடுகின்றனர்.

எம்மைப்போன்று பாதிக்கப்பட்ட பல நாடுகள் உள்ளன. அவை பல வருடங்களாக நாணய நிதியத்தின் உதவியைப் பெறமுயற்சித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் எம்மால் குறுகிய காலத்துக்குள் அந்த உதவியைப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. இலங்கை மீது நாணய நிதியத்துக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவேயாவார்.

அவரது சர்வதேச தொடர்புகள் மாத்திரமின்றி, சரியான தீர்மானங்களை அச்சமின்றி நடைமுறைப்படுத்தியமையும் இதில் செல்வாக்கு செலுத்தும்

☞ 2

## காலாவதித் திகதியை மாற்றியவரின் வியாபார அனுமதியை நீக்க உத்தரவு

### யாழ். நீதிவான் மன்று விடுத்தது



குளிர்பானப் போத்தல்களில் ஒட்டப்பட்டிருந்த காலாவதித் திகதியில் மாற்றம் செய்த விநியோகஸ்தரிற்கு ஒரு லட்சத்துப் 10 ஆயிரம் ரூபாய் தண்டத்துடன் அவரது வியாபார அனுமதியை இரத்துசெய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநகர ஆணையாளரிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ். நகர்பொதுசுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன் குளிர்பானங்களின் காலாவதித் திகதியில் மாற்றம் செய்து விநியோகத்த

☞ 2

## ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் போட்டி நீக்கப்பட்டபின் ஜனக்க ரத்நாயக்க பேட்டி

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜனகரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து தான் அகற்றப்பட்டமை இலங்கைமக்களிற்குஏற்பட்ட தோல்வியாகும்.

இது எனது தோல்வியில்லை. இது இலங்கையின் அனைத்து மக்களினதும் தோல்வி. இதனைப் பற்றி எனக்கு எந்தப் பிரச்சினையுமில்லை

ஜனாதிபதி தேர்தலில் நான்போட்டியிடுவேன்என்று நான் முன்னரே

☞ 2

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலுக்காக

## இலங்கையிடம் இழப்பீடு இந்தியா கேட்கவில்லை

### தூதரகம் அறிக்கை

இலங்கைக்கடற்பரப்பில் சுற்றுச்சூழல் பேரிடரை ஏற்படுத்திய எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் மற்றும் எம்.ரி. நியூ டயமன்ட் கப்பல் ஆகியவற்றில் தீ விபத்து ஏற்பட்டபோது அவற்றைக் கட்டுப்படுத்த இந்தியா வழங்கிய உதவிகளுக்காக எந்தவிதக் கொடுப்பனவுகளையும் கோரவில்லை என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில்அறிக்கை ஒன்றை விடுத்துள்ள தூதரகம் அதில் தெரிவித்துள்ளதாவது:

2021 மே - ஜூன் மற்றும் 2020 செப்டம்பர் ஆகிய காலப்பகுதிகளில் முறையே எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலும் நியூ டயமன்ட் கப்பலிலும் ஏற்பட்டிருந்த தீ விபத்துகளின்போது வழங்கிய உதவிகளுக்காக இலங்கையிடமிருந்து நட்ட ஈட்டினை அல்லது சேதாரத்தை இந்தியா கோரியிருப்பதாக ஊடகங்களில் கூறப்பட்டுள்ளமை முற்றிலும் தவறானதும் பொய்யானதுமான தகவல்களாகும்.

கப்பல்களில் ஏற்பட்ட தீ விபத்துக்களின்போது அவற்றைக் கட்டுப்படுத்து-வதற்கானு துரித உதவியை வழங்குமாறு

☞ 2

## மக்களின் உரிமையைப் பறித்தவருக்கு ஆளுநர் பதவி மக்களுக்காகக் குரல் கொடுத்தவருக்கு பதவி பறிப்பா?

### சந்திம வீரக்கொடி நாடாளுமன்றில் கேள்வி

மக்களின் ஜனநாயக உரிமையை (தேர்தல்) காலவரையறையின்றி பிற்போட்ட பி.எம்.எஸ். சார்ள்ஸை வடக்கு மாகாண ஆளுநராகநியமித்தஆட்சியாளர்கள் மக்களுக்காக குரல் கொடுத்தஜனகரத்நாயக்கவை பதவி நீக்குவது எந்தளவுக்கு நியாயமானது என்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து செயற்படும் பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திமவீரக்கொடி கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய நிலையையிட்டு கவலையடைய வேண்டும். ஒரு தரப்பினரின் நோக்கத்துக்கு அமைய செயற்படாத காரணத்தால் சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீன தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவே ஜனக ரத்நாயக்கவை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக நியமித்தார். ஜனக ரத்நாயக்கவின் தகைமை தொடர்பில் கேள்வியெழுப்பும் தரப்பினர் ஏன் தொடக்கத்தில் அது தொடர்பில் அவதானம் செலுத்தவில்லை.

நாட்டு மக்களின் ஜனநாயகத்தை இல்லாதொழிப்பதற்காகவே ஒருசில ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். தேசியதேர்தல்கள் ஆணைக்குழுவை சிறந்த உதாரணமாககுறிப்பிட வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினர் சார்ள்ஸ் தேர்தலைப் பிற்போடும் ஆட்சியாளர்களின் நோக்கத்துக்கு

☞ 2

## நாட்டைக் குழப்பும் கும்பலுடன் இருப்போரைத் தெரிந்துவிட்டது

### நாடாளுமன்றில் சஜித் நேற்று சுட்டிக்காட்டு



நாட்டின் பக்கம் நிற்பவர்கள் யார், நாட்டைக் குழப்பும் கும்பலுடன் இருப்பவர்கள் யார் என்பத ஜனக்க ரத்னாயக்கவுக்கு எதிரான பிரேரணைக்கு வாக்களிப்பின் பின்னர் கண்டுகொள்ளலாமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரடத்நாயக்கவை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது,

மக்களுடன் நிற்பதா அல்லது நாட்டை அழிக்கும் மொட்டு நிழல் ஆட்சியுடன் நிற்பதா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். பொய்யும் மோசடியும் நிறைந்த ஆட்சியாளர்களுடன் கைகோர்க்க மனசாட்சியுள்ள எவராலும் முடியாது.

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மணலாற்றை மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில், சிங்கள மக்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து இதற்கு வெலிஓயாஎன்றுபெயரையும் சூட்டியுள்ளீர்கள். மகாவலி எல் வலயம் என்று சொல்லப்படும் இந்தப் பிரதேசத்திற்கு இதுவரையில் மகாவலி நீர் எட்டிப்பார்த்ததும் கிடையாது. எட்டிப்பார்க்கப் போவதுமில்லை. மாறாக, அந்நிலங்களில் பூர்வீகமாக பயிர்செய்த தமிழ் மக்களின் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டு, சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

இன்று மகாவலி எல் வலயத்திற்கேஅந்நதியின்நீர்வராத நிலையில், நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம், துணுக்காய் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கி மகாவலி ஜே என்னும் புதிய தோர் வலயத்தை உருவாக்குகிறீர்கள். இதுவும் எல் வலயம் போன்று சிங்களக் குடியேற்றங்களுக்கே தவிர, இங்கு மகாவலி நீர் வரப் போவது கிடையாது.

இந்த புதிய வலயம் தொடங்குவதற்கு முன்பாகவே, நெடுங்கேணியில் 1000ஏக்கர் நிலத்தை சீனக்கம்பெனியின் பினாமி நிறுவனமான தாய்லாந்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றிற்கு, கரும்பு பயிருடுவதற்கு கொடுப்பதற்கானநடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ள நிலங்கள் ஏற்கனவே மத்தியதர வகுப்பினருக்குப் பிரித்துவழங்கப்பட்டநிலங்கள் ஆகும். யுத்தத்தின் காரணமாக அந்த நிலங்கள் காடுமண்டிப்போக, அவற்றை வன இலாகாவிற்குச் சொந்தமான காணிகள்எனக்கூறி,அவற்றை வெளிநாட்டுநிறுவனங்களுக்கு விற்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கதும் கண்டனத்திற்குரியதுமாகும். இவ்வாறான கரும்பு பயிரிடுவதற்கு எத்தனையாயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்படும் என்பது யாருக்கும் தெரியாது. மணாலாற்றிற்கு நேர்ந்தது தான் நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம் போன்றவற்றிற்கும் ஏற்படும் என்பதை தமிழ் மக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் மனதில் கொள்ளவேண்டும். ஏற்கனவே திருகோணமலையைச் சுற்றிவளைத்து சிங்களக்குடியேற்றத்தின் மூலம், எவ்வாறு சேருவாவில என்றசிங்களதேர்தல்தொகுதி உருவாக்கப்பட்டதோ, அதே போல வவுனியாவைச் சுற்றிவளைத்து, சிங்கள குடியேற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஒரு திட்டமாகவே இது இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், மகாவலி அபிவிருத்தி என்பது முழுக்க முழுக்க சிங்கள குடியேற்றங்களுக்கே என்பதை தமிழ்க்கட்சிகள்புரிந்துகொள்ள வேண்டும். மிகப் பெரும் விவசாய நிலப்பரப்பைக் கொண்ட வன்னி மண்ணைப் பாதுகாப்பதன் ஊடாக தமிழ் மக்களின் விவசாயம், பொருளாதாரத்தை நிலைநிறுத்த முடியும். மாறாக இவற்றை வெளிநாட்டுக் கொம்பனிகளுக்கு விற்பதனூடாக அரசாங்கம் ஏதோவொரு வகையில் தான் நினைத்ததை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விவசாய நிலங்களைத் தாரை வார்ப்பதை தமிழ் மக்கள் முற்றுமுழுதாக நிராகரிப்பதுடன், வடக்கு மாகாண தமிழ் மக்களுக்கு மகாவலி அபிவிருத்தி சபை தேவையில்லைஎன்பதையும் அரசாங்கம் புரிந்துகொண்டு, அதனை வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோருகின்றோம் - என்று தனது அறிக்கையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார்.

சமூக நலனில் அக்கறையுள்ளவர், மக்களுக் காகப் போராடப் புறப்பட்ட (முடிக்கவில்லை) இயக்கம் ஒன்றின் மூத்தசெயற்பாட்டாளர்என்கிற வகையில் தமிழர் நிலங்கள் அபகரிக்கப்படுவதை எதிர்த்து அவர் குரல் கொடுத்திருக்கிறார் என்பதெல்லாம் சரி. ஆனால், அந்தத்திட்டத்திற்குள் ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சி ஒன்றின் முக்கியஸ்தரும் பங்காளியாக இருக்கிறார் என்பது குறித்து சுரேஷ் ஏன் வாயே திறக்கவில்லை?

றெலோவின்பேச்சாளரும் தேசிய அமைப்பாளருமான சுரேன் குருசாமி இந்தச்சீனித் தொழிற்சாலைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான முகாமையாளர் என்று தமிழ் பக்கம் என்கிற இணையம் தெரிவித்திருக்கின்றது. மே 18 - முள்ளிவாய்க்கால் தினத்தில் - சூம் தொழில்நுட்பம் மூலம் ஜனாதிபதியும்கலந்துகொண்ட கூட்டத்தில்சுரேன்குருசாமியும் இருந்தார். அந்தக் கூட்டத்தில் பல தடவைகள் காணொலி மூலம் அவரைப் பார்க்கவும் முடிந்திருக்கிறது. இதனைக் காலைக்கதிர் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்தியிருக்கிறது. ஆனாலும் அவர் அதனை மறுத்திருந்தார். இந்த நிலையில்தான் தமிழ்ப் பக்கம் அவருக்கும் இந்த தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்டசீனநிறுவனத்துக்குமான தொடர்பை அம்பலப்படுத்தியுள்ளது.அப்படியிருக்கும்போது இது குறித்துப் பகிரங்க அறிக்கைவிடுவதற்கு முன்னர் ஜனநாயகக் கூட்டணியைக் கூட்டி அது குறித்துச் சுரேஸ் கேள்வி எழுப்பியிருக்கவேண்டியதுதானே நியாயம்?

சுரேஸ் கூறுவதன்படி சிங்களவர்களைக்குடியேற்றுவதற்கான திட்டம்தான் இது என்றால் அதில் பங்காளியாக இருக்கும்ஒருவரைக்கொண்ட ஒரு கட்சியை ஜனநாயகக் கூட்டணி எப்படித் தனக்குள் கொண்டிருக்க முடியும்? அது அவர்கள் கூறும் அரசியலுக்கு முரணானது அல்லவா? இல்லையென்றால் அத்தகைய சிங்களக்குடியேற்றங்களுக்கு ஜனநாயகக் கூட்டணியும் அதற்கு உடந்தையா என்ற கேள்வி எழுவதைத் தடுக்க முடியாதல்லவா! அல்லது சுரேஸ் தவிர்ந்த ஜனநாயகக் கூட்டணியினர் அதற்கு உடந்தை என்று எடுத்துக் கொள்ளலாமா? ஏனெனில் இதுவரையில் அந்தக் கூட்டணியில் உள்ள வேறு எந்தவொரு தலைவரும் இது பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. கூட்டணியும்இதுகுறித்துஎந்த அறிக்கையும் விடவில்லை.

இந்தக் கட்சிகள் எல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கியபோது, இனப் பிரச்சினை தொடர்பாகச் சம்பந்தரும் சுமந்திரனும் அரசுத் தலைவர்களைத் தனியே சந்தித்துப் பேசுகிறார்கள், பின்னர் வந்து எங்களுக்கொரு விளக்கம் சொல்கிறார்கள் என்று கொந்தளிக்கத் தெரிந்த இந்தத் தலைவர்களுக்கு 'குற்றஞ்சாட்டத் தெரிந்த இந்தத் தலைவர்களுக்கு' தேர்தலின் போது மேடை போட்டுக் கிழிக்கத் தெரிந்த தலைவர்களுக்கு, தமிழ் இன இருப்பையே வடக்கில் கேள்விக்குள்ளாக்கும் ஒரு திட்டத்தோடு தமது கட்சியின் - கூட்டணியின் - முக்கியமான ஒருவரேதொடர்புபட்டுள்ளமை குறித்து எப்படி அமைதியாக இருக்க முடிகின்றது?

இது மீனுக்கு வாலும் பாம்புக்குத்தலையும்காட்டும் விளையாட்டா என்ன?

சுரேஸும்கூடஇதுகுறித்து ஒரு அறிக்கை விடுத்ததுடன் தனது கடமை முடிந்துவிட்டது என்று இருந்துவிட முடியாது. இந்தத் திட்டத்துடன் ஜனநாயகக் கூட்டணிக்குள்ள தொடர்பு மற்றும் அதன் நிலைப்பாடு தொடர்பில் மக்களுக்கு அந்தக் கூட்டணி தெளிவுபடுத்துவதை அவர் உறுதிப்படுத்தவேண்டும்.

இந்தத் திட்டம் இந்தியாவிற்கு சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறதுஎன்றகதையோடும், எல்லைகளைப் பாதுகாப்பதற்காகத்தான் இத்தகையதிட்டங்கள்ஆதரிக்கப்படுகின்றன என்கிற சமாளிப்புகளோடும் மட்டும் இதைக்கடந்துவிட முடியாது. இந்தத் திட்டம் தொடர்பில் இந்தியா முன்கூட்டிய விழிப்புணர்வோடுதான் இருந்தது. கூட்டத்தில் கலந்துகொண்ட சுரேன் குருசாமியோடு மற்றொரு மூத்த தலைவரும் அதில் கலந்துகொள்வார், அவரையும் கையும் மெய்யுமாக அம்பலப்படுத்தவேண்டும் என்கிற நோக்கோடுதான் அது இருந்தது. நல்ல வேளையாகத் தனிப்பட்ட காரணங்களால் அவர் அந்தக் கூட்டத்தில் பங்கெடுக்காமல் போய்விட்டார். அதனால் தப்பித்தார். இப்போது இந்தியாவுக்குச் சென்றிருக்கும் அவருக்கு அங்கு நல்ல கவனிப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம். என்ன செய்வது சர்வமும் செல்வம் (நிதி பணம்) மயம் என்பதால் தமிழ்அரசியல்வாதிகள்இப்படி அல்லாடுகிறார்கள் போலும்.

**- இடிமின்னல் -**

## நெடுங்கேணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின்ஆளுகையில் கீழ் இந்தப் பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. அவற்றை வெளிநாடுகளிற்கு வழங்குவதில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் முனைப்புகாட்டிவருகின்றார் என்று கூறப்படுகின்றது.

கடந்த வாரம் சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர்களை காதர் மஸ்தான் சகிதம். இப்பிரதேசங்களிற்கு காணிச் சீர்திருத்தஆணைக்குழுவின் யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகள் நேரில் அழைத்துச் சென்று காண்பித்துள்ளனர்.

இந்தச் சவூதி அரேபிய முதலீட்டாளர்கள் குழு ஏற்கனவே கிளிநொச்சியில் கௌதாரிமுனையிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருதங்கேணியில் உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் நிலங்களைப் பார்வையிட்டு அவை பொருத்தம் அற்றவை என நிராகரித்த நிலையில் நெடுங்கேணியில் உள்ள 2 ஆயிரம் ஏக்கர் காணிகளையும் பார்வையிட்டுள்ளனர்.

நெடுங்கேணியில் தற்போது முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு முயற்சிக்கப்படும்இடங்கள்1981ஆம்ஆண்டிற்குமுன்னர்தமிழ்மக்களுக்கு பகிரா்ந்தளிக்கப்பட்டவை. போரின் காரணமாக தமிழ் மக்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். அதன் பின்னர்அந்தமக்களைஅங்கு மீளக்குடியமர்த்துவதற்கு ஆட்சியாளர்கள் சார்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## முகமாலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

மோட்டார் சைக் கிளை செலுத்தியவர் உயிரிழந்ததுடன், அதில் பயணித்த சிறுவர்கள் இருவர் படுகாயமடைந்தநிலையில்பளைவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்து தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கடத்தலுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இருக்கலாம். அவர்கள் அப்படியொன்றும் செய்யவில்லை. நான் செய்யாத குற்றத்திற்காக குற்றவாளியாகியுள்ளதுடன், அபராதமும் செலுத்தியுள்ளேன்.

இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளேன். இந்நிலையிலேயே இன்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத்தலைவருக்கு எதிரானபிரேரணைக்குஎதிராக வாக்களித்தேன் - என்றார்.

## வடக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மதியமே தெரிவுசெய்யப்பட்ட ஒருசில அதிகாரிகளுடன் நடாத்திய கலந்துரையாடலின்போது வடக்கு மாகாணத்தில் காணப்படும் சமூகச் சீர்கேடுகள் தொடர்பாக அவரது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்து, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, ஒழுக்க விழுமியம் கொண்ட சமுதாயத்தை வடக்கு மாகாணத்தில் கட்டியெழுப்புவது தொடர்பான கலந்துரையாடலை தமது முதலாவதுபணியாகமறுநாள் மே 23 செவ்வாய்க்கிழமை) ஆளுநர் செயலகத்தில் அவர் நடாத்தினார்.

கல்வியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சுக்களின் செயலாளர்கள், பணிப்பாளர்கள், மாவட்டச்செயலாளர்கள்/மேலதிகசெயலளார்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள், மருத்துவர்கள், யாழ்.கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் இணைப்பாளர் ஆகியோர் சகிதம் ஆளுநர் செயலகமாநாட்டுமண்டபத்தில் இந்தக்கலந்துரையாடல்நடைபெற்றது.

இதன்போது, யாழ். மாவட்டத்தில் 2021 முதல் இன்று வரையிலான சமூகவிரோதச் செயல்கள், வன்முறைகள், பாலியல் பலாத்காரம், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பாவனை, கொள்ளை, களவு, வீதி விபத்துக்கள் தொடர்பான புள்ளிவிபர ரீதியான தகவல்களுடன் சமூக மட்டத்தில் காணப்பட்டுவரும் சீர்கேடுகளை விளக்கிய யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத், இளையோர் மத்தியிலேயே இவ்வாறான பிரச்சினைகள் பரவலாகக் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டினார்.

பெரும்பாலான குடும்பங்களில் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையில் அன்பு, பாசம் கொண்ட இறுக்கமான பிணைப்புக் காணப்படாமை இதற்கான காரணங்களில் ஒன்று என்பதை பெரும்பாலான சம்பவங்கள் தொடர்பாக தாம் நடாத்திய ஆய்வின் மூலம் கண்டறிந்திருப்பதாகவும் இதன்போது அவர் எடுத்துரைத்தார்.

இதனையடுத்து. இது பற்றி கல்வி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் செயலாளர்கள், பணிப்பாளர்கள், உத்தியோகத்தர்களிடம் ஆளுநர் விளக்கம் கேட்டதுடன், நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும்நடவடிக்கைகள் தொடர்பாகவும் வினவினார்.

கல்வியமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு மட்டத்தில் இதுதொடர்பாக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆளுநருக்கு விளக்கியதுடன், எனினும், இந்த நடவடிக்கைகளின் போதாமையை ஏற்றுக்கொண்டனர்.

குறிப்பாக இள வயதிலேயே பிள்ளைகளின் மனோநிலை, மெல்லக் கற்கும் பிள்ளைகள், வழமைக்கு மாறான நடத்தைகள் கொண்டவர்கள் போன்றோரை முற்கூட்டியே சரியாக இனங்கண்டு, அவர்களுக்கான சிகிச்சை மற்றும் வழிகாட்டலை குழந்தைகள்நல வைததியர்கள் ஊடாக சிறுவர் உளநலப் பிரிவின் கவனத்துக்குக் கொண்டுவருவதன் மூலம் வளர்ந்த பின்னர் அவர்கள் பிறழ்வான செயற்பாடுகளின் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தலாம் என யாழ்ப்பாண சுகாதார சேவைகள் பணிமனையைச் சேர்ந்த உளநலப் பிரிவுப் பொறுப்பதிகாரி மருத்துவர் கலைச்செல்வி சுட்டிக்காட்டினார்.

அதேபோல், பெரும்பாலான பிள்ளைகளின் நடத்தைகள், செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகளுக்கு பெற்றோரின் பிள்ளை வளர்ப்பு முறை பிரதான காரணமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் உமாமகேஸ்வரன், பெற்றோருக்கு பிள்ளை வளர்ப்பு தொடர்பான முறையான பயிற்சிகள், வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டியது அவசியமானது என்று வலியுறுத்தினார்.

யாழ் மாவட்டச் செயலக மட்டத்தில் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் விசேட குழு ஒன்று உருவாக்கப்பட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இதன்போது தகவல் வெளியிட்ட மாவட்டச் செயலாளர் சிவபாலசுந்தரம், பிள்ளைகள் பெற்றோர், உற்றார், உறவினர் நண்பர்களுடன் நேரத்தைச் செலவிடுவதையும், மத அனுட்டானங்கள், அறநெறி வகுப்புக்களில் பங்கேற்பதை உறுதிப்படுத்தவும்எனஞாயிற்றுக்கிழமைகளில் க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தர வகுப்புக்கள்தவிர்ந்த ஏனைய கீழ் வகுப்புக்களுக்கான தனியார் வகுப்புக்களுக்கு விடுமுறைவிடும்நடைமுறை ஒன்றைதாம் அறிமுகப்படுத்த விருப்பதாகவும் தெரிவித்தார்.

இவற்றைஏற்றுக்கொண்ட ஆளுநர் சார்ள்ஸ், பல அபிவிருத்தியடைந்த நாடுகளில் திருமணத்துக்கு முன்னரே திருமண பந்தம், குடும்ப வாழ்வு, குழந்தை வளர்ப்பு என்பன தொடர்பாக பயிற்சிகளும், வழிகாட்டல்களும் வழங்கும்நடைமுறைகாணப்படுவதாகவும், இதுபோன்ற ஒன்று இலங்கையில் இல்லாதிருப்பது பல பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது என்றும் சொன்னார். எனவே, பெற்றோரை மையப்படுத்தியதாக வழிகாட்டல் செயலமர்வுகள், பயிற்சிகளை வழங்குவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

இதற்கென ஒரு முறையான வேலைத்திட்டம் உருவாக்கப்படவேண்டும்என்றும், இதில், கல்வியமைச்சு, சுகாதார அமைச்சு என்பவற்றுடன், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களும், அவற்றில் பணியாற்றும் மகளிர், சிறுவர் மற்றும் உளநல விடயங்களோடு சம்பந்தப்பட்ட அலுவலர்களும்இணைந்துசெயற்படவேண்டும் என்றும் ஆளுநர் சார்ள்ஸ் வலியுறுத்தினார்.

சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அனைத்தையும் இணைத்து இதற்கான வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குமாறும், விரைவில் அதனைத் தனது கவனத்துக்குக்கொண்டுவந்த நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநரின் செயலாளர் பொ.வாகீசனுக்குப் பணிப்புரை வழங்கினார்.

## இன்னும் 6 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரதான காரணியாகும்.

சில சந்தர்ப்பங்களில் இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட தீர்மானங்கள் மக்களுக்கு பொருத்தமானவையாகக் காணப்படவில்லை. பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்காகவேஜனாதிபதி அவ்வாறானதீர்மானங்களை எடுத்தார்.

எவ்வாறிருப்பினும் தற்போது அந்த நெருக்கடிகள் படிப்படியாகக்குறைவடைந்து வருகின்றன. ரூபாவின் பெறுமதி உயர்வடையும்போது பொருட்களின் விலைகள் மேலும் குறைவடையும்.

வர்த்தகம், சுற்றுலாத்துறை என்பவற்றை மேம்படுத்துவதன் ஊடாகவும், இந்தியாவைப் போன்று டிஜிட்டல் மயமாக்கல் ஊடாகவும் எம்மால் அந்த இலக்கை துரிதமாக அடைய முடியும்.

ஊழல், மோசடிகள் இன்றி நேரடியாக மக்களுக்கு அரச சேவைகளைவழங்கமுடியும். அதற்கான திட்டமிடல்கள் எம்மிடமுள்ளன. அதற்கமைய எதிர்வரும் 6 மாதங்களுக்குள் வங்கி வட்டி வீதங்களையும் குறைக்க முடியும் - என்றார்.

## காலாவதித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வர்த்தகர் மீது வழக்குத் தாக்கல் செய்திருந்தார். திகதி மாற்றப்பட்ட குளிபானங்கள் விநியோகிக்கப்படுவதாகக்கிடைத்தமுறைப்பாட்டின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2 கடைகளுக்கு விநியோகிக்கப்பட்ட இத்தகைய சோடாப்போத்தல்களை கைப்பற்றிய பொது சுகாதார பரிசோதகர்கள் அதனை விநியோகஸ்தரின் வைமன் வீதியில் அமைந்துள்ள களஞ்சியசாலையினை முற்றுகையிட்டு திடீர் பரிசோதனை மேற்கொண்டனர். இதன்போது காலாவதி திகதியில் மாற்றம் செய்த 1100 சோடாப்போத்தல்கள் விநியோகத்திற்குத் தயார் நிலையில் இருந்தபோது கைப்பற்றப்பட்டன, திகதி காலாவதியான சோடாப் போத்தல்களும்எனமொத்தம் 1710 மனித பாவனைக்கு உதவாத சோடாப்போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து குறித்த விநியோகஸ்தரிற்கு எதிராக யாழ். நகர் பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் 2 வழக்குகளும், பொது சுகாதார பரிசோதகர் தி.கிருபனால் களஞ்சியசாலை குறைபாடுகளுக்காக ஓர் வழக் கும் என 3 வழக்குகள் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

3வழக்குகளிலும்குறித்த விநியோகஸ்தரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் 110,00 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் யாழ் மாநகர சபையால் குறித்த விநியோகஸ்தரிற்கு வழங்கப்பட்ட வியாபாரஅனுமதியைஇரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

## ஜனாதிபதித் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உறுதியாகதெரிவித்துள்ளேன். அது உறுதியானது.

இன்று இந்த நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் தரவுகளின் அடிப்படையில் அல்லாமல் அவர்களின் விருப்பத்திற்கும் ஆசைக்கும் ஏற்ப முடிவுகளை எடுக்கிறார்கள்,

நான் பதவியில் இருந்து நீக்கப்பட்டாலும் அல்லது ஆட்சி மாறினாலும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இன்னும் செயற்படுகின்றது. ஆணைக்குழு செயலிழக்கக் கூடாது. இதுபோன்ற போன்ற குறைந்தது 10 ஆணைக் குழுக்களாவது தேவை, மேலும் இந்த ஆணைக் குழுக்களுக்கு இந்த நாட்டை மாற்ற என்னைப் போன்ற தலைவர்கள் தேவை.

எஞ்சியுள்ள ஆணைக் குழு உறுப்பினர்கள் அரசியல் தலையீடுகள் இன்றி தமது கடமைகளை தொடர வேண்டும்.

அமைச்சர் தனது கடமையைசரியாகச்செய்யவில்லை. அவர் தொடக்கத்தில் இருந்தே தவறு செய்தார். அவர் தனது கடமைகளைச் செய்யாமல் என்னைப் பின்தொடர்ந்தார். அவர் கடந்த ஒரு வருடத்தில் என் பின்னால் வந்து அவர் விரும்பியதைச் செய்தார்.

எனக்கு எதிராக குரல் எழுப்பிய பெரும்பாலான அமைச்சர்கள், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கான எனது கட்டத்தில்என்னுடன்இணைந்து பணியாற்றினர். அவர்களின் அறிவில் பிரச்சினை இருப்பதால் என்னை எழுத்துப் பணியை செய்ய விடுவதில்லை. நம் நாடு ஒரு எரிமலை போன்றது. நம் நாடு உள்ளிருந்துஎரிகிறது, ஆனால் அதை வெளியில் இருந்து யாரும் பார்க்க முடியாது - என்றார்.

## இலங்கையிடம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இலங்கைக் கடற்படையால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே இந்தியக் கரையோரக் காவல் படையினரின் கப்பல்கள் உடனடியாக கடமையில் ஈடுபடுத்தப்பட்டன. இந்த இரு தீ அனர்த்தங்களின்போதும் ஏற்பட்டிருந்த அபாயகரமான பாதிப்புகளை முறியடிப்பதிலும் இலங்கையின் சமுத்திர சுற்றுச்சூழலிலும் கடலிலும் ஏற்பட்ட பாதிப்புகளை கட்டுப்படுத்துவதிலும் இந்தியக் கப்பல்களால் முன்னெடுக்கப்பட்டிருந்த மீட்பு பணிகள் மிகவும் முக்கிய மான வகிபாகத்தினைக்கொண்டிருந்தன.

இக்கப்பல்களை சேவையிலமர்த்தியமை, மீட்பு பணிகள் மற்றும் இக்கப்பல்களால் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்ஆகியவற்றுக்கான இழப்பீட்டுக்கான விண்ணப்பம் சர்வதேசநியமங்களுக்கு அமைவாக 'மாசுபடுத்துபவர் பணம்செலுத்தும் நெறிமுறையின்' கீழ் எம்மால் முன் வைக்கப்பட்டது. அத்துடன் குறித்த மன்றத்தில் இலங்கை சார்பாக இந்தக் கோரிக்கையுடன்இணைந்து கொள்ளுமாறு இலங்கை ஆட்சியாளர்களிடம் கோரிக்கையும் விடப்பட்டது. இந்தக் கோரிக்கைகளைக் காப்புறுதியாளர்கள் அல்லது உரிமையாளர்களிடம் சமர்ப்பித்து இழப்பீட்டுக்கான செலவீனத்தை ஏற்கனவே நிறுவப்பட்ட வழிமுறைகள் மூலம் செலுத்த வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

இலங்கையிடமிருந்து இந்தியாவால் எந்தவிதமான சேதாரங்களுமோ அல்லது நட்டஈடுகளோ கோரப்படவில்லைஎன்பது இங்கு வலியுறுத்திக் கூறப்படுவதுடன் பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் என்ற சாகர் கோட்பாடு மற்றும் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டே இந்தியா துரித கதியில் தனது கப்பல்களை சேவையில் ஈடுபடுத்தியிருந்தது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சார்பாகவே செயற்பட்டார்.

நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை கேள்விக் குள்ளாக்கி விட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர்பதவியில்இருந்து விலகினார். சிறிது காலம் தலைமறைவாக இருந்தார் தற்போது வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவே அரசியல் நோக்கம்என்றுகுறிப்பிடவேண்டும்.

மக்களின் ஜனநாயக உரிமையை காலவரையறையின்றி பிற்போட்ட சார்ள்ஸை வடக்கு மாகாண ஆளுநராக நியமித்து விட்டு மக்களுக்காக குரல் கொடுத்த ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவது எந்தளவில் நியாயமாகும் என்றார்.

## நாட்டைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் குடும்பத்தினருக்கும்நாடாளுமன்றம்வர அனுமதி மறுக்கப்பட்டபோதிலும், சட்டவிரோதமாக நடந்து கொண்ட மக்கள் பிரதிநிதிக்கு நாடாளுமன்றத்திற்கு வந்து வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

மக்களால்தாங்கமுடியாத அளவுக்கு மின்கட்டணம் அதிகரிக்கப்படும்போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மக்களின் பக்கம் இருந்து ஜனக்க ரத்னாயக்க செயற்பட்டு வந்தார்.

உயர்தர பரீட்சை இடம்பெறும்போது நாட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வந்தது. இதன்போது 24 மணி நேரம் மினசாரத்தை வழங்கவேண்டுமென3இலட்சம் மாணவர்களுக்காக ஜனக்க ரத்னாயக்க அரசுக்கு அழுத்தம் கொடுத்து வந்ததுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும்சென்று முறையிட்டார். ஆட்சியாளர்களின்தீர்மானம்முறையற்றது என அவர் தெளிவாகச் சுட்டிக் காட்டி இருந்தார்.

அதனால் ஜனக்க ரத்னாயக்க என்ற நபர் யார் என நாங்கள் பார்க்கவில்லை. அவரின் செயற்பாட்டை பார்த்தே, அவர் மக்களுக்காகவும் மாணவர்களுக்காகவும் செயற்பட்டதாலேயே அவரின் பக்கம் இருப்பதற்கு நாங்கள் தீர்மானித்தோம்.

3 இலட்சம் மாணவர்களுக்கு பரீட்சைக் காலத்தில் மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்க வேண்டுமென தெரிவித்துவந்ததைஅவருக்கு எதிரான குற்றச்சாட்டாக இந்த ஆட்சி முன்வைத்திருக்கிறது. இதுதொடர்பில் நாங்கள் வெட்கப்படுகிறோம்.

மொத்த மின் கட்டணத்தை நூற்றுக்கு 3 சதவீதம் குறைப்பதாக அரசாங்கம்நடவடிக்கைஎடுத்து-வரும் போது, நூற்றுக்கு 20சதவீதம் குறைக்க முடியுமாக இருப்பதாகத் தரவுகளுடன் ஜனக்க ரத்னாயக்க

(06ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 22 அரசியல் கைதிகளே தடுத்துவைப்பு

## நீதி இராஜாங்க அமைச்சர் தகவல்



யுத்த காலத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டவர்களில் 22 தமிழ் அரசியல் கைதி கள் மட்டுமே தற்போது சிறைகளில் உள்ளனர். அவர்களையும் விடுதலை செய்வது தொடர்பான சட்ட நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது என நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜய ரத்ன தெரிவித்தார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் ம ஹிந்த யாப்பா அபேவர்தன தலைமை யில்கூடியதையடுத்து இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநா தன் முன்வைத்த சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பான கேள்விகளுக்கு பதி லளிக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் எவ்வாறுவகைப்படுத்தப்பட்டுள்ளார்கள், கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்ற கேள்விகளுக்கு பதிலளித்த நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜய ரத்ன, நாட்டில் உள்ள சிறைச்சாலை களில் கைதிகள் ஆண் கைதிகள், பெண் கைதிகள், நீதிமன்றத்தால் தண் டனைக்குள்ளாக்கப்பட்டுள்ள கைதி கள், சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள், மரண தண்டனை கைதிகள், சிறு குற்றங்களுடன் தொடர்புடைய கைதி கள், ஆயுள் தண்டனைக் கைதிகள், சிறு வயது கைதிகள் என வகைப் படுத் தப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச் சாலைகளில்தடுத்துவைக்கப்படக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 290 ஆகக் காணப்பட வேண்டும். ஆனால் பௌதீகவளபற்றாக்குறையால் 25 ஆயித்து 899 சிறைக்கைதிகள் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள். மேலதிகமாக 14 ஆயி ரத்து 609 கைதிகள் தடுத்து வைக்கப் பட்டுள்ளார்கள். - என்றார்.

இதன்போது எழுந்த நாடாளு மன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநா தன்கண்டிபோகம்பரசிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு முறையான உணவு கிடைப்பதில்லை என சிறைக் கைதிகளின் உறவினர்கள் முறைப் பாடளித்துள்ளார்கள். இந்த விடயம் தொடர்பில் அமைச்சு அறிந்துள்ளதா எனக் கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நீதி இராஜாங்க அமைச்சர் அநுராதா ஜயரத்ன, சிறைச் சாலைகளில் விநியோகிக்கப்படும் உணவு தொடர்பில் முன்வைக்கும் கருத்துக்களைஏற்றுக்கொள்ளமுடியாது. சிறைச்சாலை கைதிகள் நிர்வாகம், உணவுவிநியோகம் உள்ளிட்ட தேவை களுக்காக வருடாந்தம் 4.6 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. பொருளாதா ரப் பாதிப்புக்கு மத்தியில் இந்த தொகை வரையறுக்கப்படவில்லை. ஆகவே, கண்டிபோகம்பர சிறைச்சாலை தொடர் பில் குறிப்பிட்ட விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துவோம். - என்றார்.

மீண்டும் எழுந்த நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் சிறைக்கைதி களை விடுவிக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பி லும் நாம் வலியுறுத்தியுள்ளோம். - என்றார்.

இதற்குப் பதிலளித்த நீதி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, பயங் கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 45 ஆண்களும், 01 பெண் என்ற அடிப் படையில் 46 பேர் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். யுத்த காலத்தில் பயங்கர வாத தடைச்சட்டத் தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைச்சா லையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 பேரின் எண்ணிக்கை 22 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில்தடுத்துவைக்கப் பட்டுள்ள 22 பேருக்கு எதிரான விசாரணைகள் நிறைவு பெறாத காரணத்தால் அடுத்தகட்ட நடவடிக் கைகளை முன்னெடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த 22 பேர் தொடர்பில் நீதியமைச்சு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து விசேட நடவடிக்கைகளை எடுக்கப்பட் டுள்ளது. இவர்களையும் விடுதலை செய்வது தொடர்பான சட்ட நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. - என்றார். (05)

# பூஸா சிறையிலிருந்து கைதி தப்பியோட்டம்!

பூஸா உயர் பாதுகாப்பு சிறைச் சாலையிலிருந்து கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று காலி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் தண்டனை விதிக்கப்பட்டி மொரட்டு வைப் பிரதேசத்தைச் சேர்ந்த அசோக ருக்மல் பெர்னாண்டோ என்ற கைதியே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தக் கைதி தினசரி வேலைப் பிரிவில் அமர்த்தப்பட்டு சிறை வளா கத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டவர் என்றும், அவ்வாறு பணி யில் ஈடுபடத்தப்பட்ட அவர் வேலை முடிந்தும் மீண்டும் சிறைக்குள் வர வில்லை என்பதை அறிந்ததும் அவர் தப்பியோடியது உறுதி செய்யப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (02)

# சிறுத்தை தாக்கியதில் தொழிலாளி படுகாயம்



பொகவந்தலாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொக வந்தலாவ, செல்வகந்த தோட்ட 5 ஆம் இலக்கத் தேயிலை மலையில் தேயிலை கொழுந்து பறித்து கொண்டிருந்த ஆண் தொழிலாளி ஒருவர் சிறுத்தையின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயம் அடைந்துள்ளார்.

இந்தச்சம்பவம் இன்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

5 ஆம் இலக்கத் தேயிலை மலையில் பதுங்கியிருந்த சிறுத்தையே குறித்த தொழிலாளியைத் தாக்கியது எனவும், சிறுத்தை ஆறு அடி நீளம் கொண்டது என வும் சம்பவத்தை நேரில் பார்த்த தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

காயங்களுக்குள்ளான ஆண் தொழிலாளி பொக வந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையின் வைத் திய அதிகாரி ஏ.எஸ்.கே.ஜெயசூரிய தெரிவித்தார். (02)

# மாணவர்களுக்கு குளவிக் கொட்டு

## பாடசாலைக்குப் பூட்டு

பண்டாரவளை பாடசாலை ஒன்றில் நேற்றுக் காலை திடீர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 6 மாணவர்களும், 5 பெற்றோர்களும் பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பண்டாரவளை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாடசாலைக்கு அருகே உள்ள தனியார் நிலத்தில் கட்டப்பட்டிருந்த குளவி கூடு கலைந்து மாணவர்கள் மற்றும் அவர்களைப் பாடசாலைக்கு அழைத்து வந்த பெற்றோர்களைக் கடுமையாகத் தாக்கியுள்ளது.

இதன்காரணமாக குறித்த பாடசாலையை இன் றும் நாளையும் மூட பண்டாரவளை வலயக் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்நிலையில் குளவிக் கொட்டால் பாதிக்கப் பட்டவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித் துள் ளன. (02)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## நீதி நிலைநாட்டப்படுவது அவசியம்

வெலிக்கடை காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தமிழ்ப் பெண் ஒருவர் உயிரிழந்த விவகாரம் நாடாளுமன்றத்தில் நேற்று பெரும் சர்ச்சையாக வெடித்திருந்தது. சிங்களத் திரைப் பட நடிகையும், தயாரிப்பாளருமான பெண் ஒருவரின் வீட்டில் இடம்பெற்ற திருட்டுத் தொடர்பாக விசாரணைக்காக அழைக்கப்பட்ட அவரது வீட்டில் பணிப்பெண்ணாகப் பணிபுரியும் ராஜகுமாரி, பின்னர் திடீர் சுகவீனமுற்றார் என்று தெரிவித்து வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

அவரது உயிரிழப்புக்கான காரணம் இன்னும் முறையாகக் கண்டறியப்படவில்லை. அதேநேரம் அவர் காவல் நிலையத்தில் இருந்தபோதே உயிரிழந்தார் என்று தொடக்கத்திலேயே எழுந்த சர்ச்சை காரணமாக, அது குறித்து விசாரணை நடத்திய அதிகாரிகள் குழு ஒன்று ராஜகுமார் முறைப்படி கைது செய்யப்பட்டுக் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கவில்லை என்று கண்டறிந்துள்ளது. அவர் அங்கு கொண்டுவரப்பட்டதற்கோ, விசாரிக்கப்பட்டதற்கோ எந்தவொரு ஆவணமும் இருக்கவில்லை என்று அந்த அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனை அடுத்தே ராஜகுமாரியின் இறப்பு எப்படி நிகழ்ந்தது என்பது தொடர்பில் சந்தேகங்கள் வலுத்தன.

காவல்துறையினரால் அவர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாம், அதுவே அவரது இறப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்கிற பலத்த சந்தேகம் நிலவுகின்றது. அதனாலேயே இது தொடர்பில் முழுமையான, வெளிப்படையான விசாரணை அவசியம் என்று எதிர்க் கட்சிகள் வலியுறுத்துகின்றன. அப்படிப்பட்ட ஒரு விசாரணை நடத்தப்படும் என்று தலைமை அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவும் உறுதியளித்துள்ளார்.

சம்பவம் நடந்து பல நாள்களின் பின்னர் இப்போது தாங்கள் புதிதாக விசாரணைகளைத் தொடக்கி இருக்கிறார்கள் என்று குற்றப் புலனாய்வுத் திணைக் கள அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்திருக்கிறார்கள். ராஜகுமாரியின் இறப்பு இயற்கையாக நிகழ்ந்ததா அல்லது அவர் கொலை செய்யப்பட்டாரா என்பது குறித்துத் தாம் புலனாய்வு செய்து வருவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

காவல்நிலையத்தில் இடம்பெற்ற இந்த இறப்பு தொடர்பில் நாடாளுமன்றம் வரையில் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதால் அது குறித்துத் தாமதமாகவேனும் அதிகாரிகள் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர். ஆனால், தமிழர்களுக்கு எதிராக இவ்வாறு காவல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட பல குற்றங்களில் இதற்கு முன்னர் நீதி கிடைத்ததில்லை. போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள் என்று பலவற்றிலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படாத வரலாறு இலங்கையில் நீண்டது. அதுவும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாக இருக்கும்போது அது இன்னும் தீவிரமாக இருக்கின்றது.

ராஜகுமாரி விடயத்திலும் அவ்வாறு நடக்காமல் நீதி நிலைநாட்டப்பவேண்டும். செய்தியின் பரபரப்பு இருக்கும்போது அரசியல்வாதிகள் இது குறித்து அக்கறை காட்டிவிட்டு பின்னர் கைவிட்டுவிடக்கூடாது. எதிர்க் கட்சிகளின் தீவிர கண்காணிப்பும் குரலுமே உயிரிழந்த பெண்ணுக்கு நீதி கிடைப்பதற்கு வழிவகுக்கும். எனவே எதிர்க்கட்சிககள் தொடர்ந்தும் இது விடயத்தில் விழிப்புணர்வோடு இருக்கவேண்டும்.

## கல்முனை உப பிரதேச செயலக வழக்கு ஜூன் 7 இல் மறுவிசாரணைக்கு வருகிறது



திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஏ.கலீலுர் ரஹ்மான் ஆகியோர் இடையீட்டு மனுதாரர்களாக நுழைந்த கல்முனை உப பிரதேச செயலக வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 07 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

கல்முனை உப பிரதேசசெயலகதரமுயர்வு தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் நீடித்து வரும் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மேன்முறையீட்டுநீதிமன்றில் கல்முனை விவகாரம் தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னர் தாக்கல் செய்திருந்த வழக்கு நேற்று (புதன்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த அறிவிப்பு நீதிபதிகள் குழாமால் விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தாக்கல் செய்திருந்த வழக்கின் இடையீட்டு மனுதாரர்களாக கல்முனையை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.கலீலுர் ரஹ்மான் ஆகியோர் நீதிமன்றுக்கு தாக்கல் செய்திருந்த இடையீட்டு மனுவை ஏற்றுக்கொள்ளுமாறு நீதிமன்ற குழாமுக்கு அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்திருந்த போது வழக்காளியான நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அந்த கோரிக்கைக்கு எதிராக தனது கடுமையான ஆட்சபனையை வெளியிட்டார்.

நேற்றைய தினம் இடைக்காலத் தீர்ப்பை நீதிமன்றம் வழங்க இருந்த நிலையில் இவ்வாறான இடையீட்டு மனுவை நீதிமன்றம் ஏற்கக்கூடாது என்றும் இடைக்கால தீர்வை நீதிமன்றம் வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தனது வாதத்தில் நீதிமன்றுக்கு முன்வைத்தார். எதிர்தரப்பினரிடமும், சட்டமா அதிபர் திணைக்களத்திடமும் இந்த இடையீட்டு மனு தொடர்பில் வினவிய நீதிபதிகள் குழாம் இந்த இடையீட்டு மனுவை ஏற்பது தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தரப்பினது ஆட்சேபனையை வழங்க ஒரு வார கால அவகாசமும் இடையீட்டு மனுதாரர்களின் ஆட்சபனைக்கான பதிலை நீதிமன்றுக்கு வழங்க ஒருவாரம் அவகாசம் வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஜூன் 07 ஆம் திகதிவரை இந்த வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் இந்த இடையீட்டு மனுவை ஏற்பதா இல்லையா என்பது தொடர்பிலான விவாதம் நடைபெற உள்ளது. அந்த விவாதத்தின் பின்னரே இடைக்கால தீர்வுகள் வழங்குவது தொடர்பில் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த வழக்கு தொடர்பில் தமிழ் மக்களிடமும், முஸ்லிம் மக்களிடமும் பலத்த வாதபிரதி வாதங்கள் சில தினங்களாக இடம்பெற்றிருந்த நிலையில் குறித்த வழக்கின் தீர்ப்பை மக்கள் எதிர்பார்த்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## பொலிஸாரின் தாக்குதலில் பெண் மரணம் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும்

### வடிவேல் சுரேஷ் வலியுறுத்து



கொழும்பு கொட்டா வீதியில் வீடொன்றில் பணிபுரிந்துவந்த பெண் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, அவருக்கு மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

அத்துடன் எந்த விசாரணையும் மேற்கொள்ளாமல் தற்போது அவரின் சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸுக்கு பொறுப்பானஅமைச்சர்உரியவிசாரணை மேற்கொண்டு சட்டத்தை நிலைநாட்ட வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பந்தய சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயேஇவ்வாறுதெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

பதுளை நாவின்ன பிரதேசத்தைச் சேர்ந்த ராஜம் ராஜகுமாரி என்ற 3 பிள்ளைகளின் தாய், கொழும்பு கொட்டா வீதியில்வீடொன்றில்பணிப்பெண்ணாக இருந்து வந்த நிலையில், கடந்த 11ஆம் திகதி வெலிகடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, அவருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல் காரணமாக காஜழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்திருக்கிறார்.

இந்த தாய் திரைப்பட நடிகை ஒருவரின் வீட்டிலே பணி புரிந்து வந்திருக்கிறார். அவரின் முறைப்பாட்டுக்கமையவே பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கைதுசெய்யப்படும்போது குறித்த பெண் சுகதேகியாகவே இருந்துள்ளார். ஆனால்பொலிஸாரின்தாக்குதல்காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளமை உறுதியாகியுள்ளது.

என்றாலும் இது தொடர்பாக எந்த விசாரணையும் மேற்கொள்ளாமல் மரணித்த பெண் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அத்துடன் சடலத்தைக் கொண்டுசெல்ல பொலிஸார் 10ஆயிரும் ரூபா வழங்கி இருக்கிறது.

மேலும்,எமதுமுறைப்பாட்டுக்கமைய தற்போது பொலிஸ் அதிகாரிகள் இரண்டுபேரைஇடைநிறுத்தியுள்ளதாகவும் 4 பெண் பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது. இதனைஏற்றுக்கொள்ளமுடியாது. இந்தசம்பவம்தொடர்பாகமுறையாக விசாரணை நடத்தப்படவேண்டும். அதனால் இது தொடர்பாக பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சர் முறையாக விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன்கொழும்பில்பணிபுரிகின்ற மலையகத்தைச்சேர்ந்த பலருக்கு இவ்வாறான சம்பவங்கள் பல இடம்பெற்றிருக்கிறன. அதனால் பணிபுரிகின்ற மலையகம் சார்ந்த இளைஞர்கள், யுவதிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றார். (50)

## பொலிஸ் காவலிலுள்ள பெண் உயிரிழந்த சம்பவம் சட்டத்துக்குப் புறம்பாக எதையும் செய்யமுடியாது

### பிரதமர் தினேஷ் குணவர்தன திட்டவட்டம்



பொலிஸ் காவலில் இருந்தபோது பெண்ணொருவர் உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணையில், சட்டத்துக்குப் புறம்பாக எதனையும் செய்வதற்கு இடமளிக்கப் போவதில்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மரணத்தில் சந்தேகம் இருப்பதாகவும், சடலத்தை தோண்டி எடுத்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சபையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனிடையே, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ மற் றும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரும், குறித்த மரணம் தொடர்பான சுயாதீன விசாரணையை கோரியிருந்தனர்.

இவர்களது இந்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பாக அண்மையில் வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த பெண் அன்றைய தினம் மாலையில், திடீர் சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

## ஓய்வூதியத்தை உடனடியாக வழங்குவதற்கு முறையான ஏற்பாட்டைச் செய்ய உத்தரவு!

ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு உடனடியாக ஓய்வூதியம் வழங்குவதற்கான முறையான திட்டத்தைத் தயாரிக்க ஓய்வூதியத் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராரச்சி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

ஓய்வூதியம்பெறுவதற்குநீண்டகால அவகாசம் எடுத்துக்கொள்வதால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்யாததால் ஓய்வூ தியம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக ஓய்வூதியத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓய்வூதியத் திணைக்களம் தொடர்பில் மக்கள் மத்தியில் விரக்தி நிலவும் அதேவேளை ஓய்வூதியம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கு சரியான வழிமுறைகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, நவீனதொழில்நுட்பத்தை பயன்படுத்தி மக்களுக்கு இலகுவாக சேவைகளை வழங்குமாறு ஜகத் குமார சுமித்ராரச்சி பணிப்புரை விடுத்திருந்தார். (05)



# இலங்கைத் தூதரகத்தின் எதிர்ப்புக்களையும் மீறி கனடாவில் தமிழர் இனப்படுகொலை நினைவுதூபி

கனடாவில்தமிழர்இனப்படுகொலை நினைவுத்தூபியை அமைக்கும் முயற்சிகளுக்கு கனடாவிற்கான இலங்கை தூதரகம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கை யுத்தத்தின் போது கொல்லப்பட்ட தமிழர்களை நினைவு கூறுவதற்காக கனடாவில் உள்ள இலங்கைத் தமிழ் சமூகத்தினர் நினைவுத் தூபியை அமைப்பதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளுக்கே இலங்கைத் தூதரகம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் எதிர்ப்பையும் மீறி பிரம்படன் மேயர் பட்ரிக் பிரவுன் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போதுஇழக்கப்பட்டஉயிர்களைநினைவு கூருவதற்கான தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார் என டெய்லி மிரர் தெரிவித்துள்ளது.

இன்னுமொரு மாநகரசபையிடம் இதேபோன்ற ஒரு நினைவுத்தூபியை அமைப்பதற்காக விடுக்கப்பட்ட வேண்டுகோளை மேயர் நிராகரித்துவிட்டார் என இலங்கை அதிகாரி தெரிவித்துள்ளார்.

கனடாவில் விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக தீவிரவாதிகள்வேறு பெயர்களில்செயற்படுகின்றனர்எனஅதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (50)

# மூலிகைத் தோட்டப் பராமரிப்புக்கு கிழக்கில் விண்ணப்பங்கள் கோரல்

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழுள்ள மூலிகைத் தோட்டங்களில் மூலிகைத் தாவரங்களை நாட்டி, சரியான முறையில் பராமரித்து அதன் பயன்பாட்டுப் பொருள்களை வழங்கக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, திருகோணமலை கப்பல்துறையில் 4 ஏக்கர் கொண்ட மூலிகைத் தோட்டத்திலும், மட்டக்களப்பு வாகரையில் 1ட ஏக்கர் கொண்ட மூலிகைத் தோட்டத்திலும் மூலிகைப் பயிர்களை நாட்டி, அதனை பராமரித்து அதன் மூலம் கிடைக்கின்ற மூலப் பொருள்களை சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு வழங்கக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மூலிகைப் பயிர்களை செய்கை பண்ணக்கூடிய வகையில், நீர் வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அங்கு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட மூலிகைத் தோட்டத்தில் 3 மாத காலப் பகுதியில் செய்கை பன்னக்கூடிய சிற்றரத்தை, திப்பிலி, இஞ்சி, சுக்கு, ஆடாதோடை, வெண்நொச்சி போன்ற இன்னும் பல மூலிகைத் தாவரங்களை செய்கை பன்னவேண்டும்.

இந்த நடைமுறையை ஊவா மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மிக நீண்டகாலமாக கடைப்பிடித்து வருவதுடன், இதற்குத் தகுதியானவர்களுக்கு வழங்கி வருவதுடன், அவர்களால் செய்கை பன்னுகின்ற மூலிகையின் பயன்பாட்டு மருத்துவப் பொருள்களை குறித்த திணைக்களம் கொள்வனவு செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதுபோன்ற நடைமுறையை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதுடன், இதில் ஆர்வமுள்ளவர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள 026-2225993, 026-2225639, 026-2225640 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும். (05)




# திருகோணமலை முதியோர் இல்லத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் விஜயம்!







இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் 3 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தெரேசா முதியோர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்து கொண்டார்.

குறித்தநிகழ்வுகடந்தசெவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன் போது முதியோர் இல்லத்தில் நினைவு நிகழ்வும் இடம் பெற்றது.

இதில் ஆளுநரின் செயலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (05)

# அரசியல் ஆலோசனை தொடர்பில் சவூதியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

வெளிவிவகார அமைச்சு மற்றும் சவூதி அரேபிய இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சுக்குமிடயில் அரசியல் ஆலோசனை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு மற்றும் சவூதி அரேபிய இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சுக்குமிடையில் அரசியல் ஆலோசனைதொடர்பானபுரிந்துணர்வுஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு முன்மாழியப்பட்டுள்ளது.

குறித்த புரிந்துணரவு ஒப்பந்தத்தின் மூலம் ஏனைய சர்வதேச நிறுவனங்களின் நேர்மய வகிபாங்குகள் மற்றும் பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள், அரசியல் போக்குகள் மற்றும் பரஸ்பர ரீதியான முக்கியமான விடயங்கள் பற்றி கருத்துக்களை பரிமாறிக்கொண்டு இருதரப்பு தொடர்புகளை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (50)

# அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர் சங்க உபதலைவராக ஏ.சீ.அன்வர் தெரிவு



அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் உபதலைவராக நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.அன்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 02.05.2023 ஆம் திகதி நடைபெற்ற அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் 26 ஆவது தேசிய மாநாட்டிலேயே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உபதலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.அன்வர் கடந்த வெள்ளிக்கிழமை பத்தரமுல்லையிலுள்ள அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்க தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற முதலாவது நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்.

நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ அன்வர் அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் தலைவராக செயற்பட்டு வருவதுடன் தனது சிறந்த தலைமையினூடாக சமுர்த்தி முகாமையாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.

சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.அன்வர் தனது 29 வருடகால சேவையினுள் அட்டாளைச்சேனை, சாய்ந்தமருது மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப் பீட சமுர்த்தி முகமையாளராகக் கடமையாற்றியுள்ளார்.

மேலும் இவர் கடந்த காலங்களில் அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராக செயற்பட்டு வந்த நிலையிலேயே இன்று சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.அன்வர் உபதலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உப தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சமுர்த்தி முகமையாளர் ஏ.சீ.அன்வருக்கு அம்பாறை மாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். (05)

# நெடுந்தீவு படகின் சுக்கான் உடைப்பு பயணிகள் நடுக்கடலில் தத்தளித்தனர்





நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த சமுத்திரதேவா படகின் சுக்கான் உடைந்து, பயணிகள் நடுக்கடலில் தத்தளித்த நிலையில், மீனவர்களின் உதவியுடன் அந்தப் பயணிகள் மீட்கப்பட்டு படகுக் கரைக்கு அழைத்து வரப்பட்டனர்.

நெடுந்தீவில் இருந்து இன்றைய தினம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை குறிகாட்டுவான் நோக்கி பயணித்த சமுத்திரதேவா படகின் சுக்கான் உடைந்தமையால் நெடுந்தீவுக்கான போக்குவரத்து தடைப்பட்டது.

சுமார் 70 பயணிகளுடன் பயணித்த சமுத்திரதேவா, மலையடிப் பகுதியை அண்மித்தபோது அதன் சுக்கான் உடைந்துள்ளது.

அந்தப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த மீனவர்களின் உதவியுடன், படகு நடத்துநர்கள் சாதுரியமாக செயற்பட்டு பயணிகளை பாதுகாப்பாக குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு கொண்டு வந்து சேர்த்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனகவுக்கு எம்மால் நற்சான்றிதழ் வழங்க முடியாது ஆணைக்குழு சுயாதீனப் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு

## விஜித ஹேரத் திட்டவட்டம்



பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தொடர்பில் எம்மால் நற்சான்றிதழ் வழங்க முடியாது. அவர் ராஜபக் க்களுக்கு சார்பாகவே செயற்பட்டார்.

தற்போது எமக்கு நபர் முக்கியமல்ல, ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாப்பதே முக்கியமானது.

அரசாங்கத்தின் அரசியல் நோக்கத்துக்கு ஜனக ரத்நாயக்க தடையாக இருந்ததால் இன்று ஆளும் தரப்பினர் அவரை வெறுக்கிறார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை பதவி விலகுமாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அழுத்தம் பிரயோகித்துள்ளார்.

அரசியல் அழுத்தத்துக்கு மத்தியில் தான் உறுப்பினர்கள் பதவி விலகினார்கள். இதனை தொடர்ந்தே ஜனக ரத்நாயக்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

ஜனக ரத்நாயக்கவுக்கு நாங்கள் நற்சான்றிதழ் வழங்கப் போவதில்லை. இவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் காலத்தில் நிதி நிறுவனங்களின் தலைவர், பிரதானியாகப் பதவி வகித்தார்.

அதன் வழக்கத்தில் தான் கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் தான் ஜனக ரத்நாயக்கவை மைக் டைசன் என புகழ்பாடிக் கொண்டு வந்தார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை.

வழமை போல் பதவி விலகுமாறு அரசாங்கம் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அழுத்தம் பிரயோகித்தது. இதனைத் தொடர்ந்து ஆணைக்குழுவின் ஒருசில உறுப்பினர்கள் பதவி விலகினார்கள். ஆனால் தலைவர் பதவி வகித்த ஜனக ரத்நாயக்க மாத்திரம் பதவி விலகவில்லை.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சுய விருப்பத்தின் அடிப்படையில் பதவி விலகினார்கள் என அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசியதேர்தல்கள்ஆணைக்குழுவின் உறுப்பினராக பதவி வகித்த சாள்ஸ் கடந்த ஜனவரி மாதம் பதவி விலகினார். சுய விருப்பத்தின் அடிப்படையில் பதவி விலகினார் எனக் குறிப்பிட்டார்.

ஆனால் தற்போது அவர் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆகவே இது எவ்வகையான அரசியல் என்பதை அரசியல் ஞானம் உள்ளவர்கள் நன்கு அறிவார்கள்.

மின்கட்டண அதிகரிப்புக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கும் போது ஆணைக்குழுவின் தலைவர் மாத்திரம் எதிர்ப்புத் தெரிவித்தார் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்தார்.

2002 ஆம் ஆண்டு தனக்கு ஆதரவாக செயற்பட்ட டக்லஸ் நாணக்கார என்பவரை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமித்தார். இதன் பின்னரே மின்கட்டணத்தை அதிகரிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியது.

ஜனக ரத்நாயக்க என்ற தனிநபர் தொடர்பில் எமக்கு எந்த கருத்தையும் குறிப்பிட முடியாது. ஆனால் சுயாதீன ஆணைக்குழு அரசாங்கத்தின் தேவைக்கு அமைய செயற்பட முடியாது. ஆகவே, சுயாதீன ஆணைக்குழுக்களை பாதுகாப்பதற்காக ஜனக ரத்நாயக்கவின் விவகாரத்தில் அரசாங்கத்துக்கு எதிராகவே செயற்படுவோம். - என்றார். (05)

# 32 பில்லியன் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்திய நபருக்கு ஆதரவா?

## சஜித்திடம் நிமல் லான்சா கேள்வி

ஐ.எம்.எப். நிதியுதவியை தாமதப்படுத்தி, திறைச்சேறிக்கு 32 பில்லியன் ரூபா நஷ்டத்தை ஏற்படுத்திய நபருக்கு ஆதரவாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்ட கருத்துக்கு ஆளும்கட்சி உறுப்பினர் நிமல் லான்சா அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

மின்சாரத்தை உற்பத்தி செய்வதும், விநியோகிப்பதும், மின்சாரசபை ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதோ பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் கிடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவாக செயற்பட்டே ஆணைக்குழுவின் தலைவராக ஜனக ரத்நாயக்க நியமிக்கப்பட்டார் என்றும் நிமல் லான்சா தெரிவித்துள்ளார்.



மேலும் மக்களின் நலன்களைச் சிந்தித்தே தடையில்லாத மின்சாரத்தை வழங்க வேண்டும் என அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் நிமல் லான்சா சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு முன்னாள் நீதியரசர் சிரானி பண்டாரநாயக்கவை பதவியிலிருந்து நீக்கியபோது, ஜனக ரத்நாயக்கவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சாட்சி வழங்கினார் என்றும் குறிப்பிட்டிருந்தார். (05)

# ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து நாடெங்கும் ஐ.தே.கவின் 100 கூட்டங்கள்

## ரணில் விக்கிரமசிங்க வியூகம்



நாடு பூராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் 100 தொகுதிக் கூட்டங்களை நடத்துமாறு அக்கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவிடம் அறிவுரை வழங்கியுள்ளார்.

அந்தவகையில், ஜூலை மாதமளவில் 80 கூட்டங்களை நடத்தி முடிக்க இயலும் என்று ரணிலிடம் பாலித வாக்குறுதி வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதிக் கூட்டங்கள் இப்போது நாடு பூராகவும் இடம்பெற்று வருகின்றன. 2024 இல் இடம்பெறப் போகின்ற ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சியைக் கிராம மட்டத்தில் பலப்படுத்தும் நோக்கிலேயே இந்தக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்று கட்சி வட்டாரம் கூறுகின்றது. (02)

# இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்குத் தீர்மானம்

## ஷெகான் சேமசிங்க தெரிவிப்பு



பல பொருளகளின் இறக்குமதி கட்டுப்பாடுகள் அடுத்த மாதம் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமான பல பொருள்களுக்கே கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேநேரம் குறித்த விவாதத்தில் பேசிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதை 4 அல்லது 05 வருடங்களுக்கு நிறுத்துமாறு கேட்டுக்கொண்டார். (05)

### நாட்டைக் .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தி இருக்கிறார்.

ஆனால் ஆட்சியாளர்கள் அவரின் கோரிக்கையை நிராகரித்து 3வீதம் குறைப்பதற்கே நடவடிக்கை எடுத்திருக்கின்றனர். ஜனக்க ரத்னாயக்க என்பவர் நாங்கள் நியமித்த நபர் அல்லர். கடந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்களுடன் சேர்ந்து செயற்பட்டவர். என்றாலும் அவரின் நடவடிக்கையை பார்த்தே அவருக்கு ஆதரவாக செயற்படுகிறோம் - என்றார்.

## மூன்றரைக் கிலோ தங்கத்துடன் கைதான

# அலி சப்ரி ரஹீம் எம்.பி. விடுவிப்பு 75 இலட்சம் ரூபா அபராதம் விதிப்பு

மூன்றரைக் கிலோகிராம் தங்கத்துடன் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய வேளை கைதான முஸ்லிம் ஐக்கிய தேசியக் கூட்டமைப்பின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்கப் பிரிவு அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டிருந்தார்.

ப்ளை டுபாய் விமான சேவைக்குச் சொந்தமான எப்.இசட் 547 ரக விமானம் மூலம் மத்திய கிழக்கு நாடொன்றில் இருந்து அவர் நாடு திரும்பியிருந்தார்.

இதன்போது, அவர் கட்டுநாயக்க விமானத் தள பிரபுக்கள் முனையத்தில் வைத்து கைதாகியிருந்தார்.

அவரிடமிருந்து ஆறு கோடி ரூபா பெறுமதியான மூன்றரைக் கிலோகிராம் தங்கம் கைப்பற்றப்பட்டது.

அவரிடம் சுங்கப் பிரிவு அதிகாரிகள் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்பின்னர் 75 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் அவர் விடுவிக்கப்பட்டார். (02)

# 22 லட்சம் மக்களுக்கும் மாணவர்களுக்கும் நாட்டில் எதிராகச் செயற்படுபவர்கள் யார்?

## சஜித் பிரேமதாஸ காட்டத்துடன் கேள்வி

22 லட்சம் மக்களுக்கும் மாணவர்களுக்கும் எதிராக செயற்படுபவர்கள் யார் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பியுள்ளார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவின் பதவி நீக்கம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

27 வீதத்தால் மின் கட்டணத்தை குறைக்க முடியும் என ஆணைக் குழுவின் தலைவர் பரிந்துரைக்கும்போது, அரசாங்கமோ 3 வீதத்தால் மாத்திரம் குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளது எனக் குற்றம் சாட்டினார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவருக்கு எனதாம் குரல்கொடுக்கவில்லை என்றும் மாறாக, நாட்டு மக்களின் நலனுக்கே முன்னுரிமை கொடுப்பதாகவும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியிருந்தார். (05)

# ஆசிரியர் மீது கடும் தாக்குதல்; 5 மாணவர்களிடம் விசாரணை

புத்தளம் பகுதியில் ஆசிரியர் ஒருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் பாடசாலை மாணவர்கள் ஐவரிடம் பொலிஸ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்துக்குத் தோற்றவுள்ள ஐந்து மாணவர்களிடமே இவ்வாறு விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நேற்று குறித்த ஐந்து மாணவர்களையும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பில் ஆசிரியர் கண்டித்துள்ளார்.

இந்நிலையிலேயே நேற்று மாலை ஆசிரியரின் வீட்டுக்குச் சென்ற மாணவர்கள் ஆசிரியரைக் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சில மாணவர்கள் தலைமறைவாகியுள்ளதுடன் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (02)

# ஹஜ் கடமைகள் தொடர்பில் இலங்கையர்களுக்கு அறிவிப்பு

இந்தாண்டு ஹஜ் யாத்திரைக்காக சுமார் 3,750 இலங்கையர்கள் புனித நகரமான மக்காவிற்கு செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவைகயில் 1585 இலங்கையர்களுக்கே இந்தக் கடமையை நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையுடன், இலங்கையர்கள் தற்போது இந்த ஒதுக்கீட்டை முழுமையாகப் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கடந்தாண்டு குறைந்த எண்ணிக்கையிலான இலங்கையர்களே ஹஜ் கடமையை நிறைவேற்றியிருந்தனர்.

அதன்படி முதல் குழு எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி இலங்கையில் இருந்து புறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# காலியில் நேற்று துப்பாக்கிச் சூடு கணவன் சாவு; மனைவி காயம்

துப்பாக்கிச்சூட்டில் கணவன் உயிரிழந்ததுடன், மனைவி படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காலி, ஹபராதுவ பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஓட்டோவில் பயணித்த தம்பதியர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் 38 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில், மனைவி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

# தமிழ் இலக்கியத்தில் முத்திரை பதித்த திருவருட் புலவர்!




இலக்கியம் என்றால் இலக்கை நோக்கி அழைத்துச் செல்லுவது என்பதுதான் அதற்கான பொருத்தமான பொருளாகியிருக்கிறது. அந்த இலக்கு எது என்பதைத் தெரிந்து கொள்ளுதல்தான் மிகவும் முக்கிய நிலையாகும். கற்பவர்க்கு இன்பத்தைப் பயப்பதுடன் அவர்களின் வாழ்வைத் திருத்திச் செம்மை செய்வதாய் இருக்க வேண்டும் என்னும் ஒரு கருத்தும், படிக்கும் பொழுதே இன்பத்தைப் பயப்பதைத் தவிர வெறொன் றுமே இல்லை என்னும் , வேறு பயனை விளைவிக்கவும் கூடாது என்னும் கருத்தும் இருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு காணப்படும் கருத்தில் முதலாவது கருத்தினையே தமிழ் இலக்கியங்களும், அதனைப் படைத்த ஆளுமைகளும் அகமிருத்திக் கொண்டார்கள் என்பது மனங்கொள்ளத் தக்கதாகும். இந்த நோக்கினை நன்றாகவே தனது குறிக்கோளாகக் கொண்டவர்தான் சேக்கிழார் அவர்கள். இவரை பல கோணங்களில் பார்ப்பதும் பொருத்தமாய் அமையுமென்று கருதுகிறேன். அந்த வகையில் இவரின் சிறப்புக் கான காரணந்தான் என்னவாக இருக்க முடியும் ?

பக்திச் சுவை நனி சொட்ட சொட்ட பாடியதால் சேக்கிழார் சிறப்புப் பெறுகிறாரா? புதிய உத்தியைக் கையாண்டதால் சேக்கிழார் உயர்ச்சி பெறுகின்றாரா? முதலமைச்சர் ஆகவிருந்தமையால் சிறப்புப் பெறு கின்றாரா?புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்தமையால் சிறப்பும் உயர்வும் பெறுகின்றாரா? அல் லது பெரியபுராணத்தைத் தந்தமை யால் சிறப்பும் உயர்வும் பெறுகின்றாரா? என்று நினைக்கத் தோன்று கிறதல்லவா ?

சேக்கிழார் வாழ்ந்த காலம் சோழப்பெருமன்னர்களின் ஆட்சிக் காலமா கும். சோழர்கள் படைநடத்திப் பெரும் வெற்றிகளைக் குவித்தார்கள். நாடு செல்வத்தில் சிறப்புற்றது. அரசர்களின் புகழ் பாடுவதிலேயே அனைவரும் இருக்கும் நிலையும் காணப்பட்டது. அப்படியான வேளையில் சேக்கிழார் சோழ அரசவையில் பொறுப்புவாய்ந்த முதல் அமைச்சராய் அமர்ந்தி ருக்கின்றார். வெற்றிச் செருக்கென்பது வீழ்ச்சிக்கே இட்டுச் செல்ல வல்லது என்பதை, வெற்றிக் களிப்பில் இருக்கும் எவ ருமே உணர்ந்திட மாட் டார்கள். மனம்போன போக்கில் மன்னர்கள் போகத்துடிப்பார்கள். மனத் தின் வழியே போய்க்கொண்டிருந்தால் முடிவில் வெற்றி என்பது வீழ்ச் சிக்கே வழிகோலியே விடும். அதனால் மனத்தை நல்வழியில் செலுத் தி னால் நாடும் சிறக் கும். நாட்டு மக்களும் சிறப்பர். மன்னனும் வாழ்த்தப் படுவான் என்பதை அமைச்சராக இருந்த சேக்கிழார் எண்ணிப் பார்க்கிறார்.


இந்த எண்ணத்தினால் , பிற்காலச் சோழமன்னரது போக்கை சேக்கிழார் விரும்பவில்லை. அவர்களின் மனோபாவம் வேறுவிதமாகப் போவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு நல்ல வழியைக் காட்டினால்த்தான் மக்களும் நாடும் மீண்டும் பழைய நிலையை அடையமுடியும் என்று கருதினார். எனவே மன்னர் மனம் மாற, மக்கள் விழிப்புப்பெற ,அவர்கையாண்ட வழிதான் ஆண்டவன் அடி யாரை அறிமுகப்படுத்தும் அதி உன்னத பணியாக அமைந்தது. அடியார்கள் ஆண்டவனைத் தவிர வேறெதையும் அகமிருத்தாதவர்கள். அவர்களின் குறிக்கோள் என்றுமே உயரிய அந்தப் பரம் பொருள் பற்றியதா கவே அமைந்திருந்தது. அங்கே சிற்றின்பத்துக்கு இடமே இல்லை. பேரின்பம் மட்டுமே பேசுபொருளாக இருந்தது எனலாம். வெற்றிக் களிப்பில் திளைத்த சோழ மன்னன் இவ்வுலக இன்பத்தை எடுத்து வழங்கும் நின்ற சீவகசிந்தாமணியிலே மூழ்கிக்கிடந்தான். இந்த நிலை நீடித்தால் அது நல்விளைவினை நல்காது என்பதை முதலமைச்சராய் இருந்த சேக்கிழார் மனஞ் சொல்லியது. இதனால் மன்னனை மடை மாற்றம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். அதுவே காலத்தின் கட்டாயம் என்றும் அவர் கருதினார். அந்தக் கருத்தின் பயனாக மலர்ந்துதான் பெரியபுராணம் என்னும் பக்திப் பொக்கிம் எனலாம்.

எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரின் திருத்தொண்டர் தொகை, பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி இரண்டுந்தான் சேக்கிழார் மனத்தில் அமர்ந்து கொண்ட மிகவும் சிறந்த கருக்கள் எனலாம். இந்தக்கருக்களை மையப்படுத்தி, அரசனும் உய்ய வேண் டும், மக்களும் உய்ய வேண்டும் என்னும் , வாழ்வியலும் உய்ய வேண்டும், என்னும் நோக்கில்தான் பெரியபுராணம் வந்து வாய்க்கிறது என்பதைக் கருத்திருத்த வேண்டும். அடியார்கள் பலரின் ஆன்மீகமும் ,அவர்களின் அகத்தின் பாங்கும் வெளிப்படும் வகையில் பெரிய புராணத்தை அமைத்திட அவர் கொண்ட முக்கிய நோக்கம் - உண்மையான இன்பம் என்றால் என்னவென்று அறியாமல் மனத்தை அலைக்கழித்து நிற்கும் சோழ மன்னன் , உண்மை யான இன்பத்தை, நிலையான இன்பத்தை அறிய வேண்டும், அதன் வழியில் அவன் பயணப்படல் வேண்டும் என்பதற்கேயாம். குடி உயரக் கோனுயர்வான் என்பதை நன்கு அறிந்தவராகச் சேக்கிழார் இருந்தபடியால் குடிகள் உயர்வுபெற வேண்டுமானால் கோன் அதாவது அரசர்களை உயிர்ப்பூண்டவேண்டும் என எண்ணினார். அதனால் மன்னர் மனத்தில் இறையுணர்வை ஊட்டுவதே மிகச்சிறந்தவழி என்று அதனை மையமாகக் கொண்டுதான் பக்திச்சுவை சொட்டச் சொட்ட பெரியபுராணத்தை ஒரு காவியமாக்கிட எண்ணினார். ஆண்டவனின் மேல் அளவிட முடியாத நம்பிக்கை கொண்டவர் சேக்கிழார் அவர்கள். அந்த ஆண்டவனையே மனமெண்ணி அரசனை அணுகினார். அரசனின் கையிலிருந்த சீவகசிந்தாமணி எந்தபயனுமே நல்காது , அதற்குப் பதிலாக இதனை நீங்கள் அறிந்தால் எல்லாமே வாய்க்கும் என்று நயமாக எடுத்துரைத்தார். ஆண்டவன் அனுக்கிரகம் வாய்க்கப் பெற்ற சேக்கிழார் வார்த்தைகள் அரசன் செவிகளில் புகுந்து அவன் அகத்தினையும் தொட்டு நின்றது. ஆண்டவன் அடியார் பெருமை களை அவனிடம் சொன்னார். அரசனும் மனநிலை தெளிந்தவனாய் உங்களின் உள்ளத்தில் உதித்த கருக்களைப் பாடுக எனப்பணித்தான். அரசே அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு என்னால் அடியார் வரலாற்றைப் பாட இயலாது. ஆகையால் ஆடம்பரமும் வேண்டாம்,.அரச போகமும் வேண்டாம், அமைச்சுப் பதவியையும் துறக்கிறேன் என்று கூறி விட்டு ஆண்டவன் சன்னிதானத்தை அடைந்து அங்குதான் தன்னுடை அரிய பணியை ஆரம்பிக்கின்றார். உலகெலாம் என்னும் அடியானது அசரீரியாய் அமைந்திட பக்தி ப்பனுவலாய் பெரியபுராணம் மாநிலம் செழிக்க, மன்னவன் பயனுற, மக்கள் உய்திபெற்றிட வந்தமைகிறது.

அமைச்சராய் இருந்த சேக்கிழாரின் புலமை சாதாரணமானதல்ல. கம்பரைப்போல கவிபாடும் ஆற்றல் அவரிடம் வாய்த்திருந்தது. அவரும் கம்பர் வழியில் காவியம் பாடியிருந்திருந்தால் சில வேளை கம்பரா மாயணத்தைக்கூட விஞ்சியியும் இருந்திருக்க வாய்ப்பு வாய்த்தாலும் வாய்த்திருக்கும் அல்லவா?ஆனால் சேக்கிழாரின் நோக்கம் அப்படியா னதாக இருக்கவே இல்லை.அதனால்த்தான் அடியார்கள் வரலாற்றைத் தேடிப் பிடித்திருக்கிறார். தேடிப் பிடித்ததோடு அமையாமல் அதனை எப்படிக் கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடுத்தும் தன் குறிக்கோளில் வெற்றியும் பெற்றவராக ஆகியும் விடுகிறார்.

சேக்கிழார் காவியத்தின் பாடுபொருளே வித்தியாசமானதாகும். இளங்கோ அடிகள் சிலம்பினைப் பாட விளைந்த வேளை உயர்திணை அல்லா ஒன்றை பாடுபொருளாகக் கொண்டிருந்தார். அதனைத் தனது மனத்திற்கொண்ட காரணத்தால் சேக்கிழாரும் தொண்டையே கருப் பொருளாக்கி பெரியபுராணத்தை காவியமாகப் படைத்து விடுவதைக் காண்கின்றோம். அறுபத்து மூன்று அடியவர் கதைகளை வைத்துக் கொண்டு ஒருகாவியத்தைப் புனைவது என்பது இலகுவான காரியமல்ல. இதனை நன்கு மனத்திற் கொண்ட காரணத்தால் எப்படியும் இந்த அடியார்களை இணைப்பதற்கு ஒரு மார்க்கம் கிடைக்காதா என்று சிந்தித்த பொழுதுதான் அடியார்கள் எவ்வாறு இருப்பினும் அவர்கள் யாவரிடமும் தொண்டு மனப்பாங்கு இருப்பதை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது எனலாம்.எனவே இப்பொழுது அடியார்கள் தொகை அவருக்குப் பெரிதாகப்படவில்லை. அங்கே தொண்டுதான் தலைமை வகித்தது. எனவே தொண்டை மையமாக வைத்து தொண்டர் பெருமை யை பறைசாற்றும் காவியத்தை எழிதாகப் புனைந்து எமக்காகவே வழாங்கியிருக்கிறார். இது சேக்கிழாரின் பெருமை என்றுதானே சொல்ல வேண்டும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், நம்பியும், பெரியபுராணத்தை அமைத்திட சேக்கிழாருக்கு பெரிதும் கைகொ டுத்தார்கள் என்பது மறுப்பதற்கில்லை. அவர்களின் பேருதவியைப் பெற்று நின்ற சேக்கிழார் அவற்றோடு மட் டும் நின்றுவிடவில்லை என்பதும் நோக்கத்தக்கது. , அடியார்கள் பற் றிய வியங்களை யெல்லாம் ஆதாரத்துடன் எடுக்க வேண்டும் என்னும் எண்ணத்தால் ஊர்கள் தோறும் சென்று பல தகவல்களையும் எடுப்பதில் அயராது நிற்கிறார். அமைச்சராக இருந்த காரணத்தால் அவர் ஊர்கள் தோறும் சென்று பல வரலாற்றுத் தகவல்களையும் கல்வெட்டுப் போன்ற வற்றையும் ஆராயும் நுண்மாண் நுழைபுலத்தைத் தன்னகத்தே கொண்டவராக விளங்கினார் என்பதும் கவனத்துக் குரியதாகும். இதனால் அவரின் காவிய மான பெரியபுராணம் தலை நிமிர்ந்து நிற் கின்ற நிலைக்கு வந்தமைந்தது. இஃது அவருக்கு உயர்வையும் சிறப் பையும் அளிக்கத்தானே செய்யும்!




பக்தியை ஊட்டுவதற்குப் பாடப்பட்டதுதான் பெரியபுராணம். எனினும் சேக்கிழார் அதன் ஊடாக பல சமூக சீர்திருத்தங்களையும் துணிந்து செய்ய நினைக்கின்றார் . இது அவரின் பெரும் சமூக அக்கறை யினையே காட்டி நிற்கிறது எனலாம். பலவியங்களையும் கற்றுத் தேர்ந்தவர் என்ற காரணத்தால்த்தான் சோழமன்னனே அவருக்கு முதல் அமைச்சர் பதவி வழங்கி பெருமைப்படுத்துகின்றான். ஆட்சியில் அதிகா ரத்தில் இருந்து வேலை பார்த்தவருக்கு நாட்டின் நிலை அங்கு வாழும் மக்களின் நிலை பற்றி முழுமை யாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பிருந்தது.தனக்குக் கிடைத்த அனுபவங்களின் வெளிப்பாடுகளை பெரிய புராணத்தில் கொண்டுவந்து நிறுத்துவதன் மூலம் அவர் தனது சமூக அக்கறையினை சொல்லியும் நிற்கி றார் எனலாம்.

பெரியபுராணத்தில் இடம்பெறுகின்ற அடியவர்களைப் பார்க்கின்ற பொழுது அவர்கள் யாவருமே வெவ் வேறு சமூக நிலையில் இருந்து வந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். அந்தணர் இருக்கிறார். அர சர், இருக்கிறார். புலையர், வேட்டுவர், மீன்பிடிகாரர், வண்ணார், குயவர், மரமேறுபவர்கள், செக்கார், ஆதிசைவர், வேளாளர், இப்படிப்பல சாதிப்பிரி வினரும் இருக்கிறார்கள். இப்படியானார்களையெல்லாம் தமது ஒப்ப ற்ற காவியமான பெரியபுராணத்தில் காட்டி அவர்ககளை வணங்கத்தக்க நிலைக்கு கொண்டு வந்தமை யினை என்ன வென்று நோக்குவது ? இதனைச் சேக்கிழாரின் புரட்சி என்பதா அல்லது அவருக்கு வாய்த்தி ட்ட சமூக அக்கறை என்பதா அல்லது அளவுக்கு மிஞ்சிய தனித் துணிச்சல் எனபதா? ஆணென்றோ, பெண்ணென்றோ பார்க்கவில்லை. அவர் களின், பொருளாதாரஏற்றத்தாழ்வு, கல்வியறிவு, சாதி, எதையுமே அவர் கருத்தில் கொள்ளவும் இல்லை.இவர்கள் அனைவரையும் சமயம் என்னும் வரம்புக்குள் நிறுத்தி இவர்கள் அனைவரும் இறைவனுக்குத் தொண்டு செய்கின்ற நிலையில் போற்றப்பட வேண்டியவர்கள் என்று காட்டி இருக்கும் சேக்கிழாரின் துணிச்சலைக் கட்டாயம் வியந்து பார்க்கவே வேண்டியிருக்கிறது.

சமூகத்தில் சாதிக்கட்டுப்பாடு என்பது மிகவும் இறுக்கமாக இருந்தி ருக்கிறது என்பதைப் பெரிய புராணத்தின் வாயிலாக வருகின்ற அடி யார்களின் வரலாற்றைக் கொண்டு அறிந்திட முடிகிறது. அது மட்டு ம ல்ல சமூதாயக் கட்டுப்பாடுகள் இறுக்கமாய் இருந்தமையால் பலர் ஆலயங்களுக்குள் பிரவேசிப்பதும், வணங்குவதும் கூட இயலாத ஒரு நிலை காணப்பட்டதையும் அறிந்திடக் கூடியதாகவும் இருக்கிறது. இதனைச் சேக்கிழார் மனித தர்மம் அற்றது எனக்கருதியிருக்கிறார். இதனால் தமது காவியத்தில் இடம் பெறுகின்ற அறுபத்து மூவரையும் அடியார்களாக்கி விடுகின்றார். பெரியபுராணத்தில் வருகின்ற அடியார் கள் பல சாதிகளைச் சேர்ந்திருந்த போதிலும் யாவரும் சிவமயமாக நின்று தொண்டையே தம்மனத்தில் இருத்திய காரணத்தால் சாதி அடிபட்டுப் போவதையே நாம் இதன் மூலம் கண்டு கொள்ள முடிகிறது. ஆண்டவன் சன்னிதானத்தில் அனைவரும் சமம் என்னும் அரிய கருத்தை அனைவரதும் அகத்தினிலும் அமர்த்திட வேண்டும் என்னும் உயரிய, புரட்சிகரமான, சிந்தனையால் சேக்கிழார் என்னும் தமிழ்ப் புலவர் சிறந் தோங்கப் பார்க்கப்டுகிறார் எனலாம். ஒதுக்கி வைக்கப்பட்டவர்களை இன்று கோவில்கள் தோறும் சிலைவடிவில் உள்ளே வைத்து பூசனைகள் செய்தும் , பெருவிழாஎடுத்தும், குருபூசை என்று குறித்துக் கொண்டாடியும் வருகின்றோம் என்றால் அந்தப்பெருமைக்கும் சிறப்புக்கும் சேக்கிழார்தான் காரணம் என்பதை எவருமே மறந்து விடமுடியாது.

சரித்திரம் என்பது வேறு. சம்பவம் என்பது வேறு.சம்பவங்களைச் சரித்திரமாக்கிய நிலையினை பெரிய புராணம் வாயிலாக சேக்கிழார் செய்திருக்கிறார். சமயத் தொண்டர் பற்றிக் கூறவந்தாலும்,ஆயிரம் ஆண் டுகால தமிழ்ச்சமூகத்தின் வரலாற்றினையும், மொழிபற்றிய நிலையும், சமயங்களின் நிலையையும் முதன் முதாலாகப் பதிவு செய்து வித்தி யாசமான ஒரு பார்வையினை சேக்கிழார் காட்டியிருக்கிறார் என்பதை மறுத்துரைத்துவிடல் முடியாது.

வீரம் என்றால் என்ன என்பதற்கு ஒரு புது விளக்கத்தைச் சேக் கிழார் காட்டுகிறார். வீரம் எனும் பொழுது உடலில் மிக்க வலிமை கொண்டிருப்பதையும், போர்களங்கள் பலவற்றைக் கண்டு அங்கு பல வெற்றிகளைக் குவிப்பதையுமே சொல்லுவதுதான் வழக்கமாகிவிட்டது. ஆனால் சேக்கிழாரோ வீரத்துக்கும், வீரர்களுக்கும், வித்தியாசமான விளக்கத்தை அளித்து வீரம் என்பதற்கே புதுமையான கருத்தினை வெளிப்படுத்தியாவரையும் வியக்கவே வைக்கின்றார் முதலமைச் சராக பதவியிலிமர்ந்து பல போர்க ளைக் கண்டிருக்கும் அனுபவம் அவருக்கு வாய்த்திருக்கிறது. ஆனாலும் அவற்றில் ஈடுபட்டவர்களை வீரர் என்றோ அவர்கள் பெற்றவை எல்லாமே வெற்றிதான் என்றோ அவரகம் ஏற்கவில்லை. அதாவது புறத் தே நடக்கும் போரைவிட அகத்தே நடக்கும் போரும் அதனை வெற்றி கொள்ளுதலுமே வீரமும் வெற்றி யும் என்று வித்தியாசமாய் அவர் உணர்ந்து கொண்டார்.

இந்த வித்தியாசமான சிந்தினையினை வெளிப்படுத்திக் காட்டிட தன்னுடைய காவியத்தில் ஒரு அடி யாரைக் கொண்டுவந்து நிறுத்துகிறார். அவர்தான் திருநீலகண்ட நாயனார்.திருநீலகண்டரின் வரலாற்றில் அவரிடம் காணப்படும் புலனடக்கத்தைக் காட்டி அதற்கான ஒரு புது விளக்கத்தை வீரமாய் பார்க்கும் சேக்கிழார் பார்வை மிகவும் புதுமை யான பார்வை என்றே எண்ணிட வைக்கிறது. இந்திரியங்களை வெல் லுவதுதான் உண்மையான வெற்றி. இந்திரியங்களை யாரொருவர் வெற்றி கொள்ளுகிறாரோ அவரே பகைகள் அற்றவராய் இருப்பார்கள் என்பதை உள்ளத்தில் இருத்திட சேக்கிழார் எண்ணிய பாங்கினை மெச் சாமல் இருந்திடவே இயலாதிருக்கிறது. தொண்டுள்ளம் வருவதற்கு இத்தகைய வெற்றி என்பதே இன்றியமையாததது என்பதுதான் சேக்கிழாரின் உறுதி யான நிலையாகும். இதுவேதான் வீரம் என்றும் அதற்கான வெற்றி என்றும் ஒரு புதிய விளக்கத்தை சேக்கிழார் தருகின்ற நிலையில் அவர் புதுமையை, புரட்சியை, விதைப்பவராகவே வந்து நிற்கிறார்.

வீரம் என்னால் விளம்பும் தகையதோ என்னும் சேக்கிழார் வாக்கினை நோக்குதல் மிகவும் அவசியமானது. பற்றை நீக்கி குறிக்கோளுடன் துறவு மனப்பான்மை கொண்டு வாழும் தொண் டர்களின் நிலையினையே தன்னுடைய நோக்கினுக்கான விளக்கமாக்கி இருக்கிறார் என்பதுதான் மிகவும் முக்கி யமாகும். அதேவேளை ஈர அன் பினர் யாதுங் குறைவிலார் வீரம் என் னால் விளம்பும் தகையதோ என்று மொழிந்து அதற்கு உரிய சான்றாக சிறுத்தொண்டர், எறிபத்தர், வீரம்படைத் தவரானாலும் ஈரமும் கொண்டவர்கள் என்று தனது பார்வையின் விசாலத்தை பரவவிடுகிறார். நாவுக்கரசர் வீரத்தை, குங்கி லியக்கலையர், கண்ணப்பர், வீரத்தையெல்லாம் எளிதில் சொல்லிவிடமுடியாது என்று சேக்கிழார் காட்டுவது சேக்கிழாரின் புதுச்சிந்தனையை வெளிப்படுத்துவதாக தெரிகிறது அல்லவா ? வீரத்துக்கு இவ்வ ளவு விளக்கமா என எண்ணத்தோன்றுகிறதா ? வீரம் மிக்கவர்கள் ஆனாலும் ஈரமும் மிக்கவர் என்பது தான் இங்கு சொல்லப்படும் முக்கிய சிந்தனை எனலாம். இதனை ஈர அன்பினர் யாதும் குறையிலார் என்று சேக்கிழார் காட்டுவதை மனமிருத்தல் வேண்டும்.

பொதுவாக இலக்கியங்களில் பெண்களை அதாவது சமகால இலக்கியங்களில்.அவள் வந்தாள் என்று விழிக்கப்பட்ட நிலையில் அதனைப் புறந்தள்ளி பெண்களுக்கு மரியாதை கொடுத்து அவர் என்றும் வந்தார் என்றும் விழிக்கும் வண்ணம் சேக்கிழார் பெரியபுராணத்தில் அமைத்திருக்கும் பாங்கும் அவரின் புதிய சிந்தனையினையே வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம்.

இலக்கியத்தில் பல சுவைகள் பாடப்படுகின்றன.எட்டுச் சுவைகள் என்பதுதான் வழக்கமாய் இருக்கிறது. ஆனால் சேக்கிழாரே புதுமை யாய் சிந்திந்து ஒரு சுவையினைத் தொட்டிருக்கிறார். அதுதான் பக்திச் சுவை . பக்திச்சுவையினைப் பக்குவமாய் கையாண்ட பெரும் தமிழ் புலவராய் சேக்கிழாரே விளங்கு கிறார். அவருக்கு முன் னோ அல்லது பின்னோ யாருமே இல்லை என்னும் அளவுக்கு பக்திச்சுவையினைக் கையாண்டு காவியம் படைத்தவர் என்னும் புத்திலக்கியச் சிற்பியாகவும் சேக்கிழாரே விளங்குகிறார் எனபதும் கருத்திருத்த வேண்டியதேயாகும். பக்தியினைக் காட்டும் வகையிலும் அவரது அணுகுமுறை புதுமையாய் இருப்பதையும் பெரியபுராணத்தால் அறிந்திட முடிகிறது.இதனால்த்தான் பக்திச்சுவை நனி சொட்ட சொட்டப் பாடிய கவி வலவ என்று ஏற்றி போற்றும் நிலைக்கு ஆளாகியிருக்கிறார் எனபது மனங்கொள்ளத்தக்கதாகும்.

அன்பினைக் காட்டும் விதம், அறத்தினைக் காட்டும் விதம், அடி யாரைக் காட்டும் விதம், கற்பனையி னைப் புகுத்தும் விதம், அனைத்தி லும் புதுமையை, புரட்சியையே காட்ட விளைகிறார் சேக்கிழார் என லாம். உவமையிலாக் கலைஞானம் உணர் வரிய மெஞ்ஞானம் அத்த னையையும் காட்டுகிறார். அப்படிக் காட்டும் வேளை பழமைவாதியாக ஆகிவிடாமல் புதுமையினைப், புரட்சியினை வெளிக்காட்டும் புதுமைப் புலவனாக, தெய்வீகப் புலவனாகவே தலை நிமிர்ந்து நிற்கிறார் என்பதை மறுத்துரைத்துவிடல் இயலாது.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்றுகாதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியாரவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண், ஆஸ்திரேலியா**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.05.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 09 புதன்கிழமை 24.05.2023 கதிர் 67

## தமிழ்ப் பெண் கொலையால் நாடாளுமன்றில் கடும் சர்ச்சை

வெலிக்கடை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட வேளை ராஜகுமாரி என்ற பெண் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஆளும் எதிர்த் தரப்பினிடைய கடுமையான வாக்குவாதம் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்தச்சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் இடம்பெறவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வேண்டுகோள்விடுத்ததைதொடர்ந்தே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்தவிடயத்தைஅரசியல்மயப்படுத்தவேண்டாமென ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க கோரியதை அடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் சீற்றமடைந்தனர். 2

## தொல்லியல் அருங்காட்சியகம் யாழ். பல்கலையில் திறப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி கா.இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம் இன்று புதன்கிழமை காலை 11 மணியளவில் திறந்துவைக்கப்பட்டது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தொடக்க நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து கலாநிதி இந்திரபாலா தொல்லியல் கண்காட்சியும் தொல்லியல் அருங்காட்சியக இணையத்தளமும் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற் குணராஜாவினால் திறந்துவைக்கப்பட்டன. நிகழ்வில் முன்னாள், 2

# பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் ஜனக்க பதவி நீக்கப்பட்டார்

### தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் இன்று நாடாளுமன்றில் நிறைவேறியது



பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்கவைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் பெரும்பான்மை வாக்குகளால் இன்று நாடாளுமன்றில் நிறைவேறியது.

தீர்மான வரைவுக்கு ஆதரவாக 123 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் கிடைத்தன..

ஜனகரத்நாயக்கவைபதவிநீக்குவது தொடர்பான தீர்மான வரைவு இன்று நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சபை முதல்வரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தீர்மான வரைவை சபையில் சமர்பித்தார். எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர விவாதத்தினைத் தொடக்கி வைத்தார்.

இந்தப் வரைவு மீதான வாக்கெடுப்பு மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்வினால் 2021 மார்ச் 14 பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக ஜனக்க ரத்நாயக்க நியமிக்கப்பட்டார்.

கடந்த ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பெரும் பொருளாதார நெருக்கடியுடன் உருவாகிய மின்சார நெருக்கடிக்கான மாற்றுத்தீர்வுகளைபொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு முன்வைத்த போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

கடந்த வருடம் ஓகஸ்ட் மற்றும் ஜனவரி மாதங்களில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளுக்கு ஆணைக்குழுவின் தலைவர் எதிர்ப்பு தெரிவித்ததால், அவருடனான முரண்பாடுகள் மேலும் தீவிரமடைந்தன.

ஆட்சியாளர்கள் முன்வைத்த கட்டண அதிகரிப்பு சதவீதத்தைவிட குறைந்த சதவீதத்தில், பொதுமக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் வகையில் மின்கட்டணத்தைஅதிகரிக்கமுடியுமெனஜனக்க ரத்நாயக்க இரு சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தியதால் துறைசார் அமைச்சர் காஞ்சன விஜயசேகரவுடன் முரண்பாடு ஏற்பட்டது. இருவரும் மாறி மாறி ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

## நாடாளுமன்றத்தின் அருகில் போராட்டம்

இலங்கைப்பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர்ஜனகரத்நாயக்கவைப் பதவி நீக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை முதல் நாடாளுமன்றத்தின்பிரதானவாயிலுக்கு அருகில் ஒருவர் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தி வருகின்றார்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவைப் பதவி நீக்கி அநீதி இழைக்க வேண்டாம். அவர் மக்களுக்காகவேசெயற்பட்டார் என்ற பதாகையுடன் அவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்துகொண்டு பொதுமக்களுக்காக உயர் நீதிமன்றத்திற்குச் சென்று அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்த அர்ப்பணிப்பான நபரை பதவி யிலிருந்து நீக்கு-வதை நான் விரும்பவில்லை என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

## இணைந்த வடக்கு கிழக்கில் சமஸ்டியே தீர்வு தெளிவுபடுத்துதல் செயலமர்வு காரைதீவில்



(வி.ரி.சகாதேவராஜா)

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான தீர்வே வழங்கப்படவேண்டும் எனும் மக்கள் பிரகடனம் தொடர்பாக தெளிவுபடுத்தும் செயலமர்வு திங்கட்கிழமை காரைதீவில் இடம்பெற்றது.

இச் செயலமர்வு வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் அகம் மனிதாபிமான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

செயலமர்வில் உரையாற் றிய அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான தீர்வினை நோக்கிய 100 நாள் செயற்பாட்டு திட்டத்தின் இறுதி நாளில் வெளியிடப்பட்ட மக்கள் பிரகடனம் தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளை வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையுடன் அகம் மனிதாபிமான வள நிலையம் மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் உட்பட வடக்குக்கிழக்கில் வாழும் மக்கள் கௌரவமாக வாழ வழி கிட்டும்" - என்றார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் சமூக நலன் விரும்பிகள் பெண்கள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர்கள், பெண்கள் என 150 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளையும் முன்வைத்தனர்

அகம் மனிதாபிமான வளநிலயத்தின் பிரதி இணைப்பாளர் அழகுராசா மதன், வரைவு தொடர்பான தெளிவூட்டலை வழங்கியதுடன் அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பும் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் நிறுவனமும் நிகழ்வு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தன.

# போதகர் ஜெரோம் குறித்த விசாரணைகள் தொடக்கம்

### உயர் நீதிமன்றுக்கு அறிவித்தார் சட்ட மா அதிபர்

சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்ட ஜெரோம்பெர்னாண்டோ குறித்து விசாரணைகளை தொடங்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்து சட்டத்தை அமுல் படுத்துமாறு கோரி எல்லே குணவங்ச தேரர் உள்ளிட்டோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணை இன்றைய தினம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த நாவன இந்த அறிவிப்பைச் செய்தார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டத்தின் கீழ் குறித்த போதகருக்கு எதிராக விசாரணைகளைத் தொடங்கியுள்ளதுடன், கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் இது தொடர்பில் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

## ஜனக்க ரத்நாயக்கவை மறைமுகமாக மனநோயாளர் என விளித்த அமைச்சர்

மனநோயாளர்களை ஜனாதிபதி வேட்பாளர்களாக முன்னிறுத்த முடியாதென பொதுப்பயன்பாடுகள்ஆணைக் குழுவின மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்; கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாகவும், அதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் ஜனக ரத்நாயக்க கூறியிருக்கிறார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம்செய்வதற்கானயோசனை மீதான இன்றைய விவாதத்தினைத் தொடக்கி வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:,

ஜனகவுக்கு எதிராக 5 குற்றச்சாட்டுக்கள் உள்ளன. முதல் இரு குற்றச்சாட்டுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அவர் தொடர்பில் வழங்கியிருந்த தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

ஜனகவுக்கு அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளவோ, ஜனாதிபதியால் நியமிக்கப்படும் அமைச்சர்களை நீக்குவ-துத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கவோ முடியாது.

2014 ஆம் ஆண்டிலிருந்து மின் கட்டணம் திருத்தப்படாமையால் மின்சார சபையும் திறைச்சேரியும், 9 வருடங்களுக்குப் 2

## ஆட்சியாளர்கள் ஏன் அச்சமடைகின்றனர்?

### மு.கா. தலைவர் நாடாளுமன்றில் கேள்வி

ஆட்சியாளர்கள் எதற்காக அச்சமடைகின்றனர் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார்.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனகரத்நாயக்கவை பதவி நீக்குவது தொடர்பான பிரேரணை மீதான விவாதம் இன்று தொடங்கப்பட்டபோது, ஒழுங்குப்பிரச்சினையை எழுப்பிய ஹக்கீம், இன்றைய தினம் கலரியில் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றே சபாநாயகர் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே பிரேரணை யுடன் தொடர்புடைய ஜனக ரத்நாயக்க விவாதத்தினை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

இந்தநிலையில் தற்போது பார்வையாளர்கள் பகுதி மாணவர்களால் முற்றாக நிரம்பியுள்ளது. ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் ஏன் அச்சமடைகின்றனர் என்று கேள்வி எழுப்பினார்.

அதன்போது, சபைக்கு தலைமைதாங்கிய பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, நாடாளுமன்ற பார்வையாளர் பகுதிக்கு பாடசாலை மாணவர்களும், உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களும்தான் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்று பதிலளித்தார்.

## தையிட்டியில் நேற்று கைது செய்யப்பட்ட 9 பேருக்கும் பிணை

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக்கோரி தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மற்றும் ஆதரவாளர்கள் 9 பேரும் இன்று மல்லாகம் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று முற்பகல் இவர்களைக் கைது செய்த பொலிஸார் இன்றுகாலை அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தினர். கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் 15 சட்டத்தரணிகள் நீதிமன்றில் முற்பட்டனர். சட்டத்தரணி சுகாஸ் தனக்காகத் தானே முற்படுவார் என்று அறிவித்தார்.

நீதிமன்ற உத்தரவுகளை மீறி விகாரையில் வழிபாட்டுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தியும், வீதிப் போக்குவரத்துக்குத் தடையாகவும் இருந்த காரணத்தால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் மன்றில் அறிக்கையிட்டனர். அதுபொய்யானது, புனையப்பட்டது என்று கைதானவர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

சட்டத்தரணி சுகாஸ் தான் கடமை நிமித்தமே அங்கு சென்றிருந்தார் என்றும் சட்டத்தரணி உடையிலேயே அங்கு நின்றிருந்தார் என்றும் அப்போது தனியார் காணிக்குள் நின்றிருந்த தன்னைப் பொலிஸாரே வீதிக்கு இழுத்து வந்தனர் என்றும் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்டபின்னர் கைது செய்யப்பட்டவர்களை பிணையில் விடுவித்து உத்தரவிட்ட நீதிவான், சட்டத்தரணிகளும் ஊடகவியலாளர்களும் தமது கடமையில் இருக்கும்போது அவர்களைக் கைது செய்வது குறித்துப் பொலிஸார் நன்கு ஆராய்ந்த பின்னர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நீதிவான் அறிவுறுத்தினார்.

தையிட்டி திஸ்ஸ விகாரையில் மே 25 நடக்க இருக்கும் சிறப்பு நிகழ்வைக் குழப்பும் வகையிலேயே இவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர் என்பதால் 2

# உல்லாச விடுதிகளுக்கான மின் கட்டணம் ஜூலை முதல் 40 சதவீதத்தால் குறைப்பு

எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வழிபாட்டுத் தலங்களுக்கான மின் கட்டணங்கள் 23 சதவீதத்தாலும் உல்லாச விடுதிகளுக்கான மின் கட்டணங்கள் 40 சதவீதத்தாலும் குறைக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நிலையான கட்டணத்தை 400 ரூபாவிலிருந்து 250 ரூபாவாக குறைக்க முன்மொழியப்பட்டுள்ளதெனவும் கூறினார்

நாடாளுமன்றத்தில் இன்று பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கும் பிரேரணையை முன்வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றியபோது கூறியதாவது:

எரிபொருள் மற்றும் நிலக்கரி ஆகியவற்றின் விலை குறைப்பின் பயனை மக்களுக்கு வழங்குவோம் என்று குறிப்பிட்டுள்ளோம்.

மின்கட்டணத்தை 3 சதவீதத்தால் குறைக்க இந்த ஆட்சி தீர்மானித்துள்ளதாக ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளது முற்றிலும் பொய்யானது.

0-30 வரையான மின் அலகுக்கான கட்டணத்தை எதிர்வரும் ஜூலை மாதம் குறைந்தபட்சம் 23 சதவீதத்தாலும், 31-60 வரையான மின்னலகுக்கான கட்டணத்தை 9 சதவீதத்தாலும் குறைக்கவுள்ளோம்.

அத்துடன் வழிபாட்டுத் தலங்களுக்கான மின் கட்டணங்கள் 23 சதவீதத்தாலும் உல்லாச விடுதிகளுக்கான மின் கட்டணங்கள் 40 சதவீதத்தாலும் குறைக்கப்படும். 0 - 30 வரையான அலகுக்கான விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டு, அலகொன்றின் விலை 25 ஆக புதிய திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலையான கட்டணத்தை 400 ரூபாவிலிருந்து 250 ரூபாவாக குறைக்க முன்மொழியப்பட்டுள்ளது. அத்துடன் 0 -30 அலகுகள் வரை பயன்படுத்தும் 15,646 மதவழிபாட்டுத்தலங்களுக்கான மின் கட்டணத்தை 23 வீதத்தால் குறைக்கவும், 31 - 60 அலகுகள் வரை பயன்படுத்தும் 10,692 மத வழிபாட்டுத் தலங்களுக்கு 7 வீதத்தால் கட்டணத்தை குறைக்கவும், உணவகப் பிரிவினருக்கு 29 வீதம் முதல் 40 வீதம் வரை மின்சார கட்டணத்தை குறைக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது - என்றார்.

# மனித உரிமை மீறல்கள் குறித்த சாட்சியங்களைத் திரட்டி ஐ.நாவிடம் கையளிக்கும் பொறுப்பு தமிழ் மக்களுக்குண்டு

## பிரித்தானியத் தமிழர் பேரவை

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை தமிழர்களுக்குக் கிட்டிய அரிய வாய்ப்பு என்று சுட்டிக்காட்டியுள்ள பிரித்தானியத் தமிழர் பேரவை, எனவே இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ்மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அனைத்து மீறல்கள் தொடர்பான சாட்சியங்களைத் திரட்டி அந்தப் பொறிமுறையிடம் கையளிக்கவேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு இருக்கின்றது என்று வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாகப் பிரித்தானியத் தமிழர் பேரவைமேலும்கூறியிருப்பவை வருமாறு –

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து தமிழ்மக்களுக்கு எதிராக அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட இனவழிப்பு தற்போதுவரை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இந்த இனப்படுகொலைகளின் உச்சகட்டமாகக் கடந்த 2009 ஆம் ஆண்டு மேமாதம் ஒரு லட்சத்து நாற்பது ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கொல்லப்பட்டபோது உலகநாடுகளும், ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச கட்டமைப்புக்களும் மௌனமாக வேடிக்கை பார்த்ததை தமிழ்மக்கள் எப்போதும் மறக்கவோ, மன்னிக்கவோ மாட்டார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்மக்களுக்கு தாயகம், தேசியம் மற்றும் தன்னாட்சி என்ற அடிப்படையில் நிரந்தர தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதையும், இனப்படுகொலை உள்ளிட்ட கடந்தகால மீறல்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் விசாரணைப் பொறிமுறையின் ஊடாக நீதியை நிலைநாட்டுவதையும் முன்னிறுத்திய பல்வேறு நடவடிக்கைகளை நாம் தொடர்ச்சியாக முன்னெடுத்துவருகின்றோம்.

அதன்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இறுதியாக நிறைவேற்றப்பட்ட 51ஃ1 தீர்மானத்தின் பிரகாரம் கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத்திரட்டி, அவற்றை வழக்குத்தொடர்வதற்கு ஏதுவான கோப்புகளாகத் தயார்செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனவே, இவ்வாறு கிடைத்த வாய்ப்பைக் கைவிடாமல், தேவையான அனைத்து சாட்சியங்களையும் சேகரித்து இந்தப் பணிக்குழுவிடம் வழங்குவதை மிகமுக்கிய கடமையாகக் கருதுகின்றோம். அதற்குரிய நடவடிக்கைகளை நாமனைவரும் இணைந்து முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும் என்று பிரித்தானியத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது. – என்றார். (05)

# ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு தலைவராக ரோஹண

பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார் என பெப்ரல் அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த தினம் நிறைவடைந்த தாய்லாந்து பொது தேர்தலுக்கு மத்தியில் பேங்கொக் நகரில் இடம்பெற்ற ஆசியாவின் தேர்தல் வலையப்பின் 8 ஆவது பொதுக் கூட்டத்தில் 18 நாடுகள் மற்றும் 29 அமைப்புகளில் இருந்து பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி அதன் பணிப்பாளராகவும் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பொதுக் கூட்டத்தின்போது செயலாளர் பதவிக்கு பிலிப்பைன்ஸ் நாட்டைச்சேர்ந்த பிலிகோராவும் பொறியியலாளர் பதவிக்கு தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பீ.சகுல் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபைக்கு இந்தோனேசியா, மியன்மார், மொங்கோலியா, மாலைதீவு மற்றும் நேபால் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதன் பிரகாரம் 2026 ஆம் ஆண்டு மே மாதம் வரை ரோஹண ஹெட்டியாரச்சி ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் தலைவராக செயற்படுவார். ரோஹண ஹெட்டியாரச்சி ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பொதுச் செயலாளராக 13 வருட காலம் செயற்பட்டுள்ளார். (05)



# திருகோணமலை ஜமாலியா பகுதியில் சுற்றிவளைப்பு!

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜமாலியா பகுதியில் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை 5 மணிமுதல் பொலிஸார் மற்றும் முப்படையினரும் குவிக்கப்பட்டு சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

திங்கட்கிழமை புல்மோட்டை பகுதியில் வைத்து பெருமளவான டைனமைற் குச்சிகளும் ஏனைய பொருள்களும் கைப்பற்றப்பட்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது அவை ஜமாலியா பகுதிக்கு கொண்டுசெல்வதற்காக வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டதையடுத்து இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றுவருவதாகத் தெரியவருகின்றது.

இதன்போது முப்படையினரும் பொலிஸாரும் பெருமளவான குவிக் கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (05)

# ஏப்ரலில் பணவீக்கம் 33.6 வீதமாக வீழ்ச்சி!

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் நாடளாவிய ரீதியிலான பணவீக்கம் கடந்த மார்ச் மாதம் 49.2 சதவீதமாக பதிவாகியிருந்த நிலையில், அது கடந்த ஏப்ரல் மாதத்தில் 33.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தப் பணவீக்க வீழ்ச்சிக்கு கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில், ஏப்ரல் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பொருள்களின் விலைகள், கட்டணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே பிரதான காரணமாக அமைந்துள்ளது.

குறிப்பாக, ஏப்ரல் மாத காலப்பகுதியில் மதுபானம், புகையிலை, எரிவாயு போன்ற பொருள்களின் விலைகள் மற்றும் நீர், மின்சாரம், போக்குவரத்து, உணவகம், ஹோட்டல்கள் போன்றவற்றின் கட்டணங்களில் வீழ்ச்சி ஏற்பட்டபோதிலும், கோழி, இறைச்சி, மீன், முட்டை, தேங்காய், உருளைக்கிழங்கு, சீனி, குழந்தைகளுக்கான பால்மா போன்ற உணவுப்பொருள்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேபோன்று தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பிரகாரம், பொருளாதாரத்தில் தளம்பல் அடையும் விலைகளைக் கொண்ட உணவு, சக்திவலு மற்றும் போக்குவரத்து போன்றவை தவிர்ந்த ஏனையவற்றுக்கான மையப் பணவீக்கமானது கடந்த மார்ச் மாதம் 44.2 சதவீதமாக பதிவாகியிருந்த நிலையில், அது ஏப்ரலில் 31.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. (05)



# யாழில் நகை மற்றும் பணத்தை திருடிய பெண் அதிரடியாக கைது

யாழ். அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, அச்செழு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த 18 ஆம் திகதி, அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தாலி, தாலிக்கொடி, மோதிரம் மற்றும் ஒரு தொகை பணம் என்பன களவாடப்பட்டிருந்த நிலையில், இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த விடயம் காங்கேசன்துறை விசேட மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில் திங்கட்கிழமை அச்செழு பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய பெண்ணொருவர் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து, தாலி மற்றும் தாலிக்கொடியை விற்று வாங்கிய சங்கிலி மற்றும் தோடு, ஒரு தொகை பணம், உருக்கிய நிலையிலான தங்கம் என்பன மீட்கப்பட்டன.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் அசேல வத்துக்கார அவர்களின் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண், மீட்கப்பட்ட தங்கத்துடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவரிடையே மோதல்

## மூன்று மாணவர்கள் கைது

இம்முறை கல்விப் பொதுதராதர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கணித கருத்தரங்கில் கலந்து கொண்ட பண்டாரவளை நகரில் உள்ள இரண்டு பாடசாலைகளின் இரு மாணவர்களை கொடூரமாக தாக்கிய குற்றச்சாட்டின்பேரில் பண்டாரவளை நகரில் உள்ள மற்றொரு பாடசாலையைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டனர் என பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூன்று மாணவர்களும் இந்த வருடம் கல்விப் பொது தராதர பரீட்சைக்கு தோற்றவுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கணிதக் கருத்தரங்கு நிறைவடைந்ததையடுத்து குறித்த இரண்டு மாணவர்களும் பண்டாரவளை நகரில் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள ரயில் பாதைக்கு சென்றபோதே இவ்வாறு தாக்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# ஐ.தே.கவின் கொழும்பு அமைப்பாளராக சாகல



ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மேற்கு தொகுதியின் புதிய அமைப்பாளராக சாகல ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு–கிருலப்பனையிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் கிளை அலுவலகத்தில் நேற்று(செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு கிழக்கு ஆகிய இரு தொகுதிகளுக்கான சபைக் கூட்டத்திலே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது நிர்வாக சபைக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் பிரதான அமைப்பாளராக சாகல ரத்நாயக்கவும் நியமிக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (05)

# பேராதனைப் பல்கலைக்கழக மாணவனைக் காணவில்லை

பேராதனை பல்கலைக்கழக கலைப்பீடத்தின் 3 ஆம் வருட மாணவனைக் காணவில்லையென பேராதெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவன் அம்பாறை – சேரகம வெருன்கட்டிகொடவைச் சேர்ந்தவரென தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாணவன் பேராதனை பல்கலைக்கழகத்தின் அக்பர் விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றுவந்த நிலையில் காணாமல் போயுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராதனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மாணவனைத் தேடும் நடவடிக்கையை பேராதனைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## தையிட்டி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று பொலிஸார் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

எனினும் ஏற்கனவே நீதிமன்றம் பிறப்பித்த கட்டளைகளின்படி போராட்டக்காரர்களும் பொலிஸாரும் நடந்துகொள்ளவேண்டும் என்றும் நீதிவான் அறிவுறுத்தினார்.

## தமிழ்ப் பெண்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மனோகணேசன், விமல் வீரவன்ச ஆகியோர் இது தொடர்பில் கடும் தர்க்கத்தில் ஈடுபட்டனர்..

இந்நிலையில், பதுளையைச் சேர்ந்த தமிழ்ப் பெண்ணிண் இறப்புத் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் இடம்பெறும் எனபிரதமர் உறுதியளித்துள்ளாரென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். எனினும், விமல்வீரவன்ச இந்த சம்பவம் குறித்து உரிய கவனத்தை செலுத்தவேண்டும். அப்பாவிகள் கொல்லப்படுவதை சகித்துக் கொள்ள முடியாது என்று குறிப்பிட்டார்.

இதனையடுத்து பிரதமர் தினேஷ் குணவர்த்தன அந்த விடயம் குறித்து உரிய விசாரணைகள் இடம்பெறும் என்று உறுதியளித்தார்.

## ஜனக்கவுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் மின் கட்டணத்தைத் திருத்தவேண்டியிருந்தது. இதனால் நுகர்வோரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தனர்.

மின் கட்டணம் திருத்தப்பட்டப் பின்னர் இலங்கை மின்சார சபை நட்டமடையவில்லை. சுயாதீன ஆணைக்குழுவை நீக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

அரசியல் நோக்கங்களுக்காக, அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்ட, எதிர்க்கட்சியினருக்கு சார்பாக நடந்துகொள்ளும் நபரை நீக்கவே நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பொறுப்புக்கூறும் நிறுவனமாக மாற்றப்பட வேண்டும் – என்றார்.

## தொல்லியல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாள் பேராசிரியர்கள், பீடாதிபதிகள், விரிவுரையா ளர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், மத்திய கலாசார நிதியத்தினர், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் அருங்காட்சியகம் வரலாற்றுத் துறை முதல் பேராசான் கலாநிதி கா.இந்திரபாலாவால் அடித்தளமிடப்பட்டது.

இந் நிலையில் அமெரிக்கத் தூதரகத்தினதும், மத்திய கலாசார நிதியத்தினதும் அனுசரணைகளாலும் தூர நோக்குடன் நவீன அருங்காட்சியகமாக பேராசி ரியர் பரமு புஷ்பரட்ணத்தால் உருவாக்கப்பட்டது.

# அலி சப்ரி ரஹீம் எம்பியின் தங்கம் அரசுடமையாகியது



புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமினால் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட தங்கம் உள்ளிட்ட அனைத்து பொருட்களும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாக பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு 75 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பதில் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

3.5 கிலோ கிராம் தங்கம் மற்றும் 91 கையடக்கத் தொலைபேசிகளே அரசுடைமையாக்கப்பட்டுள்ளது. குறித்த தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகளின் மொத்த பெறுமதி எட்டரை கோடி ரூபாவுக்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது –என்றார்.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேற்று முற்பகல் துபாயிலிருந்து நாடு திரும்பிய போது, தங்க பிஸ்கட்கள் மற்றம் கையடக்க தொலைபேசிகளுடன் சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டார். தற்போது அவர் வெளியில் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# கொவிட் இறப்புகள் நாட்டில் அதிகரிப்பு



இலங்கையில் 03 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை இந்த உயிரிழப்புக்கள் இடம்பெற்றன என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 09 பேர் திங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


இதன்படி இலங்கையில் 6 லட்சத்து 72 ஆயிரத்து 380 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாட்டில் மீண்டும் இன, மத வாதம் தலைதூக்க இடமளிக்கவேண்டாம்

## இஷாக் ரஹ்மான் ஜனாதிபதியிடம் கோரிக்கை





நாட்டில்இனவாதத்தையும்மதவாதத்தையும் மீண்டும்உருவாக்கஜெரொம்பெர்னாண்டோ என்றமத போதகர் முயற்சிக்கின்றார். இதற்கு இடமளித்துவிட வேண்டாம் என்று ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறோம் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் இாக் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உற்பத்திவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

நாட்டில் ஒருவருடத்துக்கு முன்னர் இனவாதம், மதவாதம் தலைதூக்கியிருந்தது. இதில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக பாரிய போராட்டம் நடைபெற்ற வரலாறும் உள்ளது.

இந்நிலையில் ஜெரொம் பெர்னான்டோ என்றமத போதகர் நாட்டில் உள்ள அனைத்து மதங்களையும் மிக மோசமான மார்க்கம் என்று கூறி மீண்டும் நாட்டில் இனவாதம், மதவாதத்தை தூண்டிவிட செயற்படுவதை அவதானிக்கமுடிகின்றது. இதனைபேராயரும் எதிர்த்துள்ளார்.

இனவாதம், மதவாதம் நாட்டின் பொருளாதாரத்தை எந்தளவு சீரழித்தது என்பது எமக்கு தெரியும். இதனால் மீண்டும் இனவாதம், மதவாத்ததுக்கு இடமளித்துவிட வேண்டாம் என்று ஜனாதிபதியை கோருகின்றோம். சிங்கப்பூர், மலேசியா போன்றா நாடுகளில் இனவாதத்தை இல்லாது செய்தமையாலேயே அந்த நாடுகள் முன்னேற்றமடைந்தன. இதனால் இங்கே இனவாதத்துக்கு இடமளிக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும்

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து சட்டத்தை நிலைநாட்டுவதன் மூலமே, அதனைக் காரணம் காட்டி, மறைந்திருக்கும் இனவாதிகள் தலைதூக்குவதை தடுக்க முடியும். அதனால் நாட்டைவிட்டு சென்றுள்ள குறித்த மத போதகரை நாட்டுக்கு கொண்டுவந்து. அவரிடம் முறையாக விசாரணை மேற்கொள்ளவேண்டும், அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதியைக் கோருகின்றோம். – என்றார். (05)

# புத்தசாசனத்தை காக்கவும் வளர்க்கவும் இந்த ஆட்சி பொறுப்புடன் செயற்படும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன உத்தரவாதம்



புத்தசாசனத்தை பாதுகாக்கவும் வளர்ச்சி பெற செய்யவும் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும். மிகிந்தலை முதல் அநுராதபுரம் வரையான பொசன் உற்சவ வலயத்துக்கு தேவையான நிதி மற்றும் மனித வள ஒத்துழைப்புக்கள் முழுமையாக வழங்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்வைத்த கேள்விக்குபதிலளிக்கையில்மேற்கண்டவாறு பதிலளித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றியவை வருமாறு –

மிகிந்தலை முதல் அநுராதபுரம் வரையான பொசன் உற்சவத்துக்கு தேவையான போதுமான நிதி இதுவரை ஒதுக்கப்படவில்லை. ஆகவே இம்முறை பொசன் உற்சவத்தைக் கொண்டாடுவது சிரமமாக உள்ளது என மிகிந்தலை விகாரையின் விகாராதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

நிதி நெருக்கடி காரணமாக வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வை புறக்கணிக்க முடியாது. புத்தசாசன நிதியம், ஜனாதிபதி நிதியம் ஆகியவற்றில் போதுமான நிதி உள்ளது. ஆகவே அந்த நிதியை கொண்டு உற்சவத்தை விமரிசையாக நடத்தலாம்.

புத்தசாசனத்தை ஆளும் தரப்பினரே அரசியலாக்கினார்கள். அரசியல் மேடைகளில் குறிப்பிட்ட விடயங்களை பேச்சளவில் மாத்திரம் செயற்படுத்தாமல் செயலளவில் உறுதிப்படுத்துங்கள். – என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்தன, 1972 ஆம் ஆண்டு அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு 09 ஆவது அத்தியாயத்தில் பௌத்த மதம் தொடர்பான ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

புத்தசாசனத்தை பாதுகாப்பதற்கும், அதனை வளர்ச்சி பெற செய்வதற்கும் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படும். நடைமுறைக்கு சாத்தியமான வகையில் பௌத்த மத விவகாரங்களில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய அம்சங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நிதி நெருக்கடி காரணமாக பொசன் உற்வசத்துக்குத் தேவையான நிதியை ஒதுக்கவில்லை என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சகல அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் உரிய நிதி மற்றும் மனித வள ஒத்துழைப்புக்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆகவே மிகிந்தலை முதல் அநுராதபுரம் வரையான பொசன் உற்சவ வலயத்துக்கு தேவையான நிதி வழங்கப்படும். – என்றார். (05)

# கடப்பாடுகளை உரிய காலப்பகுதியில் நிறைவேற்றுவதே பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஒரே வழி!

## சர்வதேச நாணய குழு அதிகாரிகள் 'அட்வைஸ்'

வலுவான கொள்கைத் தீர்மாணங்களை அடுத்து இலங்கையின் பெரும்பாகப்பொருளாதார நிலைவரத்தில் முன்னேற்றகரமான சமிக்ஞைகள் தென்படுகின்ற போதிலும், ஒட்டுமொத்த கொள்கைசார் மற்றும் பெரும்பாகப்பொருளாதார நிலைவரம் சவால்மிக்கதாகவே காணப்படுவதாக இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடிவுக்குக்கொண்டு வந்திருக்கும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

அதேவேளை உரியவாறான மறுசீரமைப்புக்களை மேற் கொள்வதுடன் மத்திய வங்கி யின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தல், ஆட்சி நிர்வாகத்தை மேம்படுத்தல், வறிய மற்றும் பின்தங்கிய சமூகப்பிரிவினரைப் பாதுகாத்தல் உள்ளிட்ட முக்கிய கடப்பாடுகளை உரிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதன் மூலமே இப்பொருளாதாரநெருக்கடியிலிருந்து இலங்கையால் மீளமுடியும் என்றும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயற்திட்டத்தின்கீழ் சுமார் 3 பில்லியன் டொலர் கடனைப் பெற்றுக்கொள்வதற்கான இறுதிக்கட்ட இணக்கப்பாடு கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி எட்டப்பட்டது.

அதனையடுத்து சர்வதேச நாணயநிதியத்தால்இவ்வாண்டின் பின்னரைப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள இலங்கை தொடர்பான முதலாவது மதிப்பீட்டுக்கு முன்னரான வழமையான ஆய்வுகளின் ஓரங்கமாக சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய, பசுபிக் திணைக்களத்தின் இலங்கைக்கான செயற்திட்டத்தலைவர் பீற்றர் ப்ரூயர் மற்றும் இலங்கைக் கிளை தலைவர் மஸாஹிரோ நொஸாகி ஆகியோர் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் கடந்த 11ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இக்காலப்பகுதியில் ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்ரமசிங்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கப்பிரதிநிதிகள், தனியார் துறையினர் மற்றும் அபிவிருத்திப்பங்காளிகள் உள்ளடங்கலாகப் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடிய அவர்கள், நாட்டின் அண்மையகால பொருளாதார நிலைவரம் தொடர்பில் மதிப்பீடுகளையும் மேற்கொண்டிருந்தனர். அதன்படி இலங்கைக்கான தமது உத்தியோகபூர்வ விஜயத்தை முடிவுக்குக்கொண்டுவந்த சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள், இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

இலங்கைக்கான எமது விஜயத்தின்போது பெரும்பாகப்பொருளாதாரத்திலும், நிதியியல் துறையிலும் ஏற்பட்டுள்ள அண்மையகால மாறுதல்கள் தொடர்பில் கலந்துரையாடினோம்.

வலுவான கொள்கைத் தீர்மானங்களை அடுத்து இலங்கையின் பெரும்பாகப்பொருளாதார நிலைவரமானது பணவீக்க வீழ்ச்சி, நாணயமாற்றுவீத உறுதிப்பாடு, மத்திய வங்கிகையிருப்பின் மீள்வலுவாக்கம் ஆகியவற்றுடன்கூடிய முன்னேற்றகரமான சமிக்ஞைகளை வெளிப்படுத்துகின்றது. எதுஎவ்வாறிருப்பினும் ஒட்டுமொத்த பெரும்பாகப்பொருளாதார மற்றும் கொள்கை நிலைவரம் சவால்மிக்கதாகவே காணப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதிவசதிச்செயற்திட்டத்தின் பிரகாரம் முக்கிய கடப்பாடுகளை நிறைவேற்றுவதை முன்னிறுத்தி இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம்.

அதன்செயற்திறன்தொடர்பாக எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ள முதலாவது மதிப்பீட்டின் போது கணிப்பிடப்படும்.

அதேவேளை வெற்றிகரமான வருமான உட்பாய்ச்சலை உறுதிசெய்வதற்கு மிக அவசியமாக மேற்கொள்ளப்படவேண்டிய மேலதிக நிதியியல் நடவடிக்கைகள் தொடர்பாக நாம் கலந்துரையாடினோம். அதேபோன்று தற்போது உள்ளக மற்றும் வெளிநாட்டுக் கடன்வழங்குநர்களுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுகள் தொடர்பில் அவதானம் செலுத்தியதுடன் கடன்மறுசீரமைப்புச் செயன்முறையில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடினோம். சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டின்படி கடன் ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்தவேண்டுமெனில், முதலாவது மதிப்பீட்டு செயன்முறைக்கு முன்னதாக (செம்ரெம்பர் மாதத்துக்கு முன்னர்) கடன்மறுசீரமைப்பு தொடர்பில் கடன்வ–ழங்குநர்களுடன் இணக்கப்பாட்டை எட்டுவது அவசியமாகும். அதுமாத்திரமன்றி உரிய–வாறான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதும், மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தல், ஆட்சிநிர்வாகத்தை மேம்படுத்தல், வறிய மற்றும் பின்தங்கிய சமூகப்பிரிவினரைப் பாதுகாத்தல் உள்ளிட்ட முக்கிய கடப்பாடுகளை உரிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதும் இலங்கை இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளாகும் என்று அவ்வறிக்கையின் ஊடாக சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (05)

# படையினருடன் புலிகளை ஒன்றிணைப்பது கோழைத்தனம்; நினைவுத்தூபி அமைக்கும் முடிவு கைவிடப்பட வேண்டும்!

## சரத் வீரசேகர ஆவேசம்



நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த படையினரையும், விடுதலைப் புலிகளையும் ஒன்றிணைத்து நினைவுகூரும் வகையில் தூபி அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை கோழைத்தனமானது.

அரசாங்கத்தின்தீர்மானத்தையிட்டு வெட்கமடைகிறேன். தீர்மானம் திருத்திக் கொள்ளப்பட வேண்டும் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வர்த்தமானி கட்டளைகள் மீதான விவாதத்தின் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

யுத்தத்தில்உயிரிழந்தஅணைவரையும் நினைவுகூரும் வகையில் 'நினைவு தூபி'ஒன்றைஸ்தாபிக்கஅமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது.இதனைநல்லிணக்கம்என்று குறிப்பிடக் கூடாது. கோழைத்தனமான செயற்பாடு என்றே குறிப்பிட வேண்டும்.

நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த முப்படையினரையும், விடுதலை புலிகள் அமைப்பினரையும் எவ்வாறு ஒருமித்து பார்க்க முடியும். நாட்டில் அரசமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவே முப்படையினர் போராடினார்கள். விடுதலை புலிகள் அமைப்பினர் நாட்டுக்கு எதிராக செயற்பட்டார்கள்.

முப்படையினரையும்,விடுதலை புலிகளையும் ஒருமித்து பார்க்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தையிட்டு வெட்கமடைகிறேன். ஆகவே நினைவுத் தூபி அமைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

திருகோணமலை மாவட்டத்தில் சியாம் நிகாய மத வழிபாட்டுக்கு தமிழ் அரசியல்வாதிகள் காரணமின்றித் தடையேற்படுத்துவார்களாயின் பாரிய அழிவுஏற்படும்என்றுநான்குறிப்பிட்ட கருத்தின் நோக்கத்தை அறியாமல் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்த கருத்துக்களையிட்டு கவலையடைகிறேன்.

இலங்கை தேரவாத பௌத்த நாடு என்பதை மறுக்க முடியாது. நாடு முழுவதும் பௌத்த சின்னங்கள் உள்ளன. இதன் காரணமாகவே இலங்கை பௌத்த நாடு என்று குறிப்பிடுகிறோம். அதனை விடுத்து இனவாத அடிப்படையில் இலங்கை பௌத்த நாடு என்று குறிப்பிடவில்லை. - என்றார். (05)

# கடலில் மூழ்கிய சீன கப்பலில் இருந்து சுழியோடிகளால் 14 உடல்கள் மீட்பு!

## இலங்கை கடற்படை தகவல்

இந்து சமுத்திரபகுதியில் மூழ்கிய சீன மீன்பிடிக்கப்பலில் இருந்து இதுவரை இலங்கை சுழியோடிகள் 14 உடல்களை மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை கடற்படை இலங்கைக்கு தெற்கே ஆஸ்திரேலிய தேடுதல் மீட்பு பகுதியில் மீட்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்துள்ளது.

கடலில் மூழ்கிய சீன மீன்பிடிக்கப்பல் லுபெங் யுவான் யு 028னில் காணப்பட்டவர்களை மீட்பதற்கான முயற்சிகளில் உதவுவதற்காகவேதேடுதல்மீட்புநடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கைகடற்படையின்ரோந்துகப்பல் எஸ்.எல்.என்.எஸ்விஜயபாகுகடற்படையின் சுழியோடிகளுடன் முக்கியமான பணியில் ஈடுபடுகின்றனர் என அனுப்பப்பட்டது என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்ப0டை தளபதி வைஸ்அட்மிரல் பிரியந்த பெரேராவின் உத்தரவின் பேரிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட பகுதியை சென்றடைந்த இலங்கை கடற்படையின் சுழியோடிகள் தலைகீழாக காணப்பட்ட கப்பலில் எவராவது உயிருடன் உள்ளனரா என்பதை கண்டுபிடிப்பதற்காக எயர்பொக்கட்களை மிகவும் துல்லியமாக ஆராய்ந்துள்ளனர்.

கண்ணிற்கு எதுவும் தென்படாதநிலைநீர் கொந்தளிப்பு ஆகியசவாலானசூழ்நிலைகளின் மத்தியில் கடுமையாக சுழியோடிய பின்னர் கடற்படைசுழியோடிகள்தலைமைமாலுமியின் கபின் மற்றும் தங்கும் அறைகளில் இருந்து இரண்டு உடல்களை மீட்டுள்ளனர் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

இதனைதவிர கப்பலின் வேறு பகுதிகளில் இருந்து மேலும் 12 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. (05)

SRI LANKA NAVY

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொதுத் தூபியின் தேவையும் நோக்கமும்

போர் மற்றும் மோதல்களால் இலங்கையில் உயிரிழந்தவர்களுக்காக ஒரு பொதுத் தூபியைப் பொருத்தமான இடத்தில் அமைப்பதற்கு அமைச்சரவை முடிவு செய்திருக்கின்றது. அதற்கான இடத்தைத் தேர்வு செய்யும்படி கேட்கப்பட்டிருக்கின்றது. அது அனேகமாகத் தலைநகர் கொழும்பில் அமைவதற்குத்தான் வாய்ப்புக்கள் உள்ளன.

கொழும்பில் இத்தகையதொரு தூபி அமைவது சில வகைகளில் சிறப்பானதும்கூட. அது பொதுத் தூபியாக இருக்கும்பட்சத்தில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் போன்ற நிகழ்வுகளை அந்த இடத்தில் நடத்த வாய்ப்புக் கிடைக்கும். அதேபோன்று ஒரு தரப்பினர் என்று இல்லால் எல்லாத் தரப்பினரும்கூடத் தத்தமது மனச் சாந்திக்கான அஞ்சலிகளைச் செலுத்துவதற்கும் வழி ஏற்படுத்தும். அடுத்து வரும் தலைமுறைகள் போர்களிலும் மோதல்களிலும் ஈடுபடாமல் விட்டுக்கொடுப்புடன் வளர்வதற்கும் அது இடமளிக்கக்கூடும்.

இவையெல்லாம் ஒரு பொதுத் தூபி குறித்த வெளிப்படையான பார்வைகள். அதற்காக அது அப்படி நல்ல பக்கங்களை மட்டுமே கொண்டிருக் கும் என்றும் எண்ண முடியாது. இலங்கையின் ஆட்சியாளர்களை அதுவும் சிங்கள ஆட்சி யாளர்களை ஒருபோதும் நம்பமுடியாது. அவர்ககள் எதையும் நேர்மையாகச் சிந்திப்பவர்கள் கிடையாது. வெளியே ஒன்றும் உள்ளே வேறொரு நோக்கமுமாகச் செயற்படுபவர்கள். இந்தப் பொதுத் தூபி விடயத்திலும் அவர்கள் அவர்களின் உள்நோக்கம் என்னவென்று தெரியாது அந்தத் திட்டத்தை ஆதரித்துவிட முடியாது.

இத்தகைய பொதுத் தூபி ஒன்றை அமைப்பதற்கு ஏற்கனவே சிங்களக் கடும்போக்குவாதிகளிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. போரில் கொல்லப்பட்ட படையினரையும் பயங்கரவாதிகளையும் ஒன்றாக மதிக்கும் வகையில் ஒரு பொதுத் தூபியை உருவாக்குவது வெட்கக்கேடானது என்று முன்னாள் கடற்படை அதிகாரியும் நாடாளு மன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தெரிவித்திருக்கிறார்.

அதேபோன்றதொரு எதிர்ப்பு தமிழர் தரப்பிடம் இருந்தும் வரும் என்று எதிர்பார்க்கலாம். போர்க் குற்றங்களிலும், மனித உரிமை மீறல்களிலும் இனப்படுகொலையிலும் ஈடுபட்ட படையினருடன் அவர்களால் கொல்லப்பட்ட அப்பாவிப் பொது மக்களுக்கும் ஒரு பொதுத் தூபியா என்கிற கட்டணங்கள் விரைவில் தமிழர் தரப்பில் இருந்தும் எழும்.

உயிரிழந்த இலங்கைப் படையினரின் ஞாப கார்த்தமாக ஏற்கனவே ஒரு நினைவுத் தூபி உள்ளது. எனவே இந்தப் பொதுத் தூபிய போரிலும் மோதல்களிலும் உயிரிழந்த பொது மக்களுக்கானதாக அரசு கட்டமைத்துக் கொள்ளலாம். அதேநேரம் இந்தப் பொது தூபி அமைக்கப்படுகிறது என்பதற்காகத் தமிழர்கள் முள்ளிவாய்க்கால் போன்ற நினைவிடங்களில் தூபிகளை எழுப்பக்கூடாது என்று ஆட்சியாளர்ககள் தடை விதிக்கக்கூடாது. எல்லோருக்குமான பொதுத் தூபி இருக்கிறதுதானே பின்னர் எதற்குத் தமிழர்களுக்குஎன்றுதனியானதூபிஎன்றுவாதிடக்கூடாது.

போரில் எல்லாத் தரப்புப் பொதுமக்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ கொல்லப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் நினவவுகூரப்படவேண்டியவர்கள்தான். இனியும் அப்பாவிகள் கொல்லப்படக்கூடாது என்பதற்காக அவர்களை நினைவுகூர்வது தேவைதான்.

அதேநேரம் படுகொலை செய்யப்பட்டவர்கள், திட்டமிட்ட அழிக்கப்பட்டவர்கள், வேண்டுமென்றே பழிவாங்கப்பட்டவர்களின் மனங்கள் இதுபோன்ற பொதுத் தூபிகளால் மட்டும் சாந்தியாகிவிடமாட்டா. எனவே அத்தகைய தூபிகள் எழுப்பப்படுவதைத் தடை செய்வதை உள்நோக்கமாகக் கொண்டு பொதுத் தூபி எழுப்பப்படக்கூடாது. பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான தூபியை எழுப்பி, அஞ்சலி நிகழ்வுகளை நடத்துவதற்கு எப்போதும் அனுமதிக்கப்படவேண்டும். அது அவர்களின் உரிமையும்கூட. அதைத் தடுக்கும் வகையில் பொதுத் தூபிக் கட்டமைப்பை ஆட்சியாளர்கள் திட்டமிட்டால், தமிழர் தரப்பு அதனை முற்றாக எதிர்க்கும்.

# இன அடிப்படையில் வேறுபடாமல் ஒன்றிணைந்தால் முன்னேறலாம்

## பாட்டலி சம்பிக்க ஆலோசனை



நாடுவங்குரோத்துஅடைந்ததுடன் பாரம்பரிய அரசியல் கட்சிகளும் வங்குரோத்து நிலையடைந்து விட்டன. தமிழ், முஸ்லிம், சிங்களம் என இன அடிப்படையில் வேறுபடாமல் இலங்கையர் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய குடியரசு முன்னணி என்ற அரசியல் களத்தை ஸ்தாபித்துள்ளோம். நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த அரசியல் மாற்றத்தை எம்மால் ஏற்படுத்த முடியும். குடும்ப அரசியலுக்கு இனி இந்த நாட்டில் இடமில்லை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மஹறகமபகுதியில்உள்ள தேசிய இளைஞர் கழக மன்றத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கட்சி அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு –

சாதாரண குடும்பத்தில் பிறந்து இலவச கல்வியின் பயனை முழுமையாகப் பெற்று தொழிற்றுறை ஊடாக அரசியலுக்குள் பிரவேசித்தேன். எனக்குப் பின் நீ தான் அரச தலைவர் என்று குறிப்பிடும் குடும்ப பின்னணி எனக்குக் கிடையாது. குடும்ப ஆட்சிநாட்டைசீரழித்துள்ளதை நாட்டு மக்கள் அனுபவ ரீதியாகத் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

நாட்டில் 83 அரசியல் கட்சிகள் உள்ள நிலையில் புதிதாக ஓர் அரசியல் கட்சி ஒன்றுஅவசியமாஎனக்கேள்வி எழுப்பப்படுகிறது. 2022.04.12 ஆம் திகதி நாடு வங்குரோத்து நிலை அடைந்ததுடன் பாரம்பரிய மான அரசியல் கட்சிகளும் வங்குரோத்து நிலை அடைந்து விட்டன. பாரம்பரிய மான அரசியல் கட்சிகள் மக்கள் மத்தியில் இனி செல்வாக்குச் செலுத்தாது.

பொருளாதாரம், அரசியல் உட்பட அனைத்துக் கட்டமைப்பிலும் இளம் தலைமுறையினர் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். புதிய மாற்றத்துக்கான பரிணாமமாக ஐக்கிய குடியரசு முன்னணி என்ற புதிய அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்என நோக்கம்உள்ள சிறந்த தரப்பினர் எம்முடன் தாராளமாக இணைந்து கொள்ளலாம்.

எனது அரசியல் பயணத்தில் பல அரசாங்கங்களில் அமைச்சு பதவி வகித்துள்ளேன். எனது நிர்வாகத்தில் நாட்டுக்குக் கேடு ஏதும் விளை விக்கப்படவில்லை என்பதைஉறுதியாகக்குறிப்பிட முடியும். அபிவிருத்தி என்ற பெயரில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச முறையற்ற வகையில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களை சுட்டிக்காட்டியதால் 2013 ஆம் ஆண்டு அமைச்சு பதவியில் இருந்து நீக்கப்பட்டேன்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் சகல இனத்தவர்களையும் ஒன்றிணைத்து நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்கும் பொன்னான வாய்ப்பு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு கிடைத்தது. யுத்த வெற்றியை அவர் தன் குடும்ப வெற்றியாகக்கருதிவெளிப்படைத்தன்மையுடன் செயற் படாமல் அடுத்த தவணை அரசியல் வெற்றிக்காகசெயற்பட்டார். இறுதியில் அரசியலில் தோல்வியடைந்துநாட்டை நெருக்கடிக்குள்ளாக்கினார்.

ராஜபக்சர்களின் பலவீனமான நிர்வாகத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் நாட்டு மக்கள் 2015 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ராஜபக்சர்களின் பலவீனமான நிர்வாகக் கொள்கை திருத்திக் கொண்டு நல்லாட்சி அரசாங்கம் நாட்டைச் சிறந்த முறையில் நிர்வகித்தது. அரச தலைவர்களுக்கு இடையிலான முரண்பாடு அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்தது. ஆனால் நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளவில்லை என்பதைப் பெருமையுடன் எம்மால் குறிப்பிட முடியும்.

நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்தி ராஜபக்சர்கள் 2019 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்தார்கள். தவறான பொருளாதாரக் கொள்கையால் நாடு வங்குரோத்து நிலை நோக்கிச் செல்கிறது. நாட்டுக்காகத் தவறுகளை திருத்திக் கொள்ளுங்கள் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் பலமுறை எடுத்துரைத்தோம். ராஜபக்ச குடும்பத்தின் தவறான ஆலோசனைகளால் அவர் சிறந்த ஆலோசனைகளுக்கு முக்கியத்துவமளிக்கவில்லை. கண்மூடித்தனமாகச் செயற்பட்டார். இறுதியில் நாடு வங்குரோத்து நிலையடைந்தது. அரசியல் மாற்றமும் ஏற்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைத் தொடர்ந்து நாடு சற்று இயல்பு நிலைக்குத் தற்போது திரும்பியுள்ளது. ஆனால் இது நிலையானதல்ல. 2048 ஆம் ஆண்டு பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைய முடியும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். 2048 ஆம் ஆண்டு அவரும் உயிருடன் இருக்கமாட்டார். நானும் உயிருடன் இருக்க மாட்டேன். ஆகவே, நாட்டு மக்களைத் திசைதிருப்பும் அல்லது ஏமாற்றும் கருத்துக்களைக் குறிப்பிடுவதை இனியாவது தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நாட்டு மக்களின் நாளைய பொருளாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. இன்றைய பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் மூன்று தசாப்தங்கள் தொடர்பில் சிந்திப்பது பொருத்தமற்றது. ஆகவே, மூன்று வருட காலத்துக்குள் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் திட்டத்தை வகுக்க வேண்டும். அதற்கான மனித வளம் எம்மிடம் உள்ளது.

தமிழ், முஸ்லிம, சிங்களம் என இன அடிப்படையில் வேறுபடாமல் இலங்கையர் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய குடியரசு முன்னணி என்ற அரசியல் களத்தை ஸ்தாபித்துள்ளோம். நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த அரசியல் மாற்றத்தை எம்மால் ஏற்படுத்த முடியும். குடும்ப அரசியலுக்கு இனி இந்த நாட்டில் இடமில்லை. – என்றார். (05)

# கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களை உள்ளடக்கிய மேந்கு பெருநகர அபிவிருத்தி திட்டம்!

## விரைவில் ஆரம்பம் என்கிறார் பிரசன்ன ரணதுங்க

மேற்கு பெருநகர அபிவிருத்தி திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கினார்.

இந்தத் திட்டத்தின் இறுதி மதிப்பாய்வுக்குப் பிறகு அடுத்தகட்டப் பணிகளை 3 மாதங்களுக்குள் மேற்கொள்ளவும் அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மேற்குப் பெருநகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க, அண்மையில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பின் போது, மேற்குப் பெருநகர அபிவிருத்தித் திட்டத்தைமீளஅமுல்படுத்துவதற்கான பணிகளை ஆரம்பிக்குமாறு அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்திருந்தார். அதன்படி, இது தொடர்பாக கலந்துரையாடுவதற்காகநகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இந்தக் கலந்துரையாடலைநடத்தினார்.

மேற்கு பெருநகர அபிவிருத்தித் திட்டம் 2016 இல் தயாரிக்கப்பட்டது. இதுசிங்கப்பூர் நகரவடிவமைப்புநிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய 3 மாவட்டங்களுக்காக இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது, இதன் கீழ் இந்த மாவட்டங்கள் பொருளாதார, வணிக, கலாசார மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக அபிவிருத்தி செய்யப்படும்.

இங்கு, நாடு பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளதால், தற்போதைய பொருளாதார நிலைமைக்கு ஏற்றவாறு இந்த அபிவிருத்தித் திட்டத்தை மேம்படுத்தி, அதன் இறுதி மீளாய்வை அடுத்த மாதத்துக்குள் விரைவில் மேற்கொள்ளுமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கினார். இந்த நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், நகர அபிவிருத்தி அதிகார சபை இந்த அபிவிருத்தித் திட்டத்தை வர்த்தமானி மூலம் வெளியிடும்.

இந்தத் திட்டத்தின் கீழ், மீரிகம மற்றும் ஹொரணை கைத் தொழில் நகரங்களாகவும், மாலப்பே மற்றும் ஹோமாகம தொழில்நுட்பநகரங்களாகவும், பதுரலியமற்றும்அவிசாவளை பெருந்தோட்டநகரங்களாகவும், நீர்கொழும்பு மற்றும் வத்தளை கரையோர சுற்றுலா நகரங்களாகவும், கட்டான மற்றும் கட்டுநாயக்கவை போக்குவரத்து மற்றும் விமான நகரங்களாகவும், கஸ் பேவ சொகுசு வீட்டு நகரங்களாகவும், முத்துராஜவெல சுற்றுச்சூழல் வலய நகரங்களாகவும் அபிவிருத்தி செய்யப்படும். கொழும்பு வர்த்தக நகரமாகவும் ஸ்ரீ ஜய–வர்தனபுர நிர்வாக நகரமாகவும் அபிவிருத்தி செய்யப்படும்.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நகர அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி பிரதேசமாக அறிவிக்கப்பட்டும் எந்தவொரு பிரதேசத்துக்கும் நகர அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து நடைமுறைப்படுத்தக் கடமைப்பட்டுள்ளது. இது 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் உள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர்டபிள்யூ.எஸ். சத்யானந்தா, மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு) டபிள்யூ. எம். ஆனந்த, உதவிச் செயலாளர் (நகர அபிவிருத்தி டபிள்யூ. பி. யு.காவிந்யா, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதி பணிப்பாளர்நாயகம்(திட்டமிடல் வலயம் 2) லலித் விஜயரத்ன மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

# இரத்தினபுரி அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம் நிதிநெருக்கடி காரணமாகவே இடைநிறுத்தமாம்

*நிதி நெருக்கடி காரணமாகவே இரத்தினபுரிக்கான அதிவேக நெடுஞ்சாலைநிர்மாணப்பணிகளை தற்காலிகமாக நிறுத்த வேண்டிய நிலைஏற்பட்டது என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.*

*நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் அஜித் மான்னப்பெரும எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*அவர்தொடர்ந்துபதிலளிக்கையில்-*

*தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கடன்களை பெற்றுக் கொண்டே இரத்தினபுரிக்கான அதிவேக நெடுஞ்சாலை நிர்மாண வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும் பொருளாதாரப் பின்னடைவு காரணமாக அந்தத் திட்டத்தை இடை நடுவில் நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அது தொடர்பில் காணிகளை பெற்றுக் கொடுத்த போது பெரும்பாலானவர்கள் அதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்காக பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் தலையீடு செய்துள்ளார்கள். ஒப்பந்தக்காரர்கள் நட்ட ஈடு கோரி வருகின்றார்கள்.*

*இதுவரை365காணித்துண்டுகளுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2545 காணித்துண்டுகளுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டியுள்ளது.*

*அந்தத் திட்டத்திற்காக நிதியை தேட முடியாத நிலையிலே அதற்காக தொடர்ந்து நிதி ஒதுக்க முடியாத நிலை காணப்படுகிறது. நட்ட ஈட்டை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை எவர் ஆரம்பித்தாலும் இது மிக சிறந்த திட்டமாகும். நிதி நெருக்கடி காரணமாகவே அந்தத் திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இது தற்காலிக நிறுத்தம் மாத்திர மாகும்.*

*அத்துடன் நிர்மாணப் பணிகள் இடம் பெறாத காணிகளில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கான அனுமதி அப்பகுதி பிரதேச செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ளது. - என்றார். (05)*